ஓம்

# இந்துசாதனம்

SUPPLEMENT TO THE HINDU ORGAN.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

புத்தகம்—[illegible] } யாழ்ப்பாணம்:— தாதுவ௵ ஆவணி௴ ௧௨௳ ( 1936 ஆகஸ்ட் 27 ) வியாழக்கிழமை { இலக்கம்— ௩௯

## அபிஸீனியாவில் இத்தாலியர் நிலைமை

### சக்கரவர்த்தி நாடுதிரும்பினல் சம்பவிக்கக்கூடியதென்ன?

### அபிஸீனிய நிருபர் "ஸ்பெக்டேட்டர்" பத்திரிகையில் எழுதியுள்ளவை

அபிஸீனியாவின் பீட பூமிப் பிரதேசங்களில் மழைக் காலம் தொடங்கிவிட்டது. ஹாவாஷ் நதியும் ஸிடிமோ, அருஸி, செர்செர் முதலிய மாகாணங்களிலும் மழை பொழிய ஆரம்பித்துவிட்டது. இனி செப்டம்பர் மாதம் இறுதிவரை இந்த மழைவிடாது பெய்து கொண்டிருக்கும் ஒவ்வொருநாளும் 3 அல்லது 4 மணி நேரம் கனத்த மழை பெய்யும். பிறகு வானத்தில் மந்தாரமின்றி சூரியன் பிரகாசிக்கும். இவ்விதம் தினசரி மழை பெய்வதால் மழைக்காலம் தொடங்கி இரண்டு வார காலத்தில் எங்கும் சேறு நிரம்பி விடுகிறது. அடிஸ் அபாபா, டிரிடாவா, ஹாரார போன்ற பெரிய நகரங்களில் மட்டுமே எவ்விதமான வண்டிப் போக்குவரத்தும் இருக்க முடியும். சாலைகள் எல்லாம் சேறும்விடுவதால் கோவேறு கழுதைகளின் போக்கு வரத்துக்கூட மிக அரிதாகவே காணப்படும். ஆறுகளில் வெள்ளம் கரைபுரண்டோடுமாதலால் அவைகளைக் கடக்க இயலாது போகும் விமானத்திடல்கள் சதுப்பு நிலமாய்விடுவதினுல் விமானங்கள் வந்து இறங்குவதும் திடலைவிட்டுக் கிளம்புவதும் சாத்தியமில்லாது போய்விடும்.

#### பாசறைகளைவிட்டு வெளியேற முடியாது

செப்டம்பர் மாத முடிவில்தான் மழை ஓயும். ஆனல் அக்டோபர் முடிவில்தான் பூமி காய்ந்து சிறிது மோட்டார்கள் ரோட்டில் செல்லக்கூடியதாக இருக்கும் அப்பொழுது காட்டுப்புறத் தெருக்களில் பெரிய லொரிகள் செல்லமுடியாது. ஆறுகள் கடந்து செல்ல முடியாதவைகளாகவே இருக்கும்.

இந்த மழை காலம் மூன்று மாதங்களிலும், பின்னர் தரை காய்வதற்கான ஒரு மாதத்திலும் எதியோப்பியர்கள் ஏதேனும் முயற்சி செய்யக்கூடும். இத்தாலியர்கள் பாசறைகளை விட்டு வெளியேற முடியாது. அடிஸ் அபாபாவுக்கும் வடபகுதிக்கும் உள்ள போக்கு வரத்துத் தடைப்பட்டு விட்டது. ஜீபூதி ரெயில்வே மூலமுதக் கடற்கரையோடு மட்டுமே போக்கு வரத்து இருந்து வருகிறது.

#### இதுதான் சந்தர்ப்பம்

இந்த மாரிக்காலத்தில் பல இடங்கள் வெள்ளத்தால் அடித்துக் கொண்டு போகப்படும். பயிர்கள் முளைத்து வெளிக்கிளம்பிக்கொண்டிருக்கும். சாதாரணமாக அபிஸீனியர்கள் இந்தக் காலத்தில் ஒரு வேலையும் செய்வதற்கின்றி வீட்டில் படுத்திருப்பார்கள். ஆனல் இப்பொழுது இத்தாலியர்கள் தலைநகரமான அடிஸ்அபாபாவை வசப்படுத்திக் கொண்டிருக்கும் சமையத்தில் அவர்கள்பேசாமல் இருந்துவிடுவார்களா என்பதே கேள்வி. ஏனெனில் எதியோப்பியாவின் எதிர்காலம் இப்பொழுது எதியோப்பியர்கள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளத் தயாராக இருக்கிறார்கள் என்பதையே பொறுத்திருக்கிறது.

#### இத்தாலியர்களிடம் வெறுப்பு

பொதுவாக எதியோப்பியர்கள் அமாரா வகுப்பினராயினும் சரி,

(தொடர்ச்சி 2ம் பக்கம்.)

## பல்லிழந்து வாழேன்

—

'யார்கை' அடுத்துள்ள, 'காஸல் போட்' என்னும் கிராமத்தில் வசித்த 16 வயதினளான "லுஸிலின் கூரோசர்" என்ற கன்னிகை தன் தோழிகளுடன் 'யார்க்' நகர்ச் சந்தைக் கூட்டத்திற்குச் சென்றிருந்தாள். கூட்டத்தின் நெருக்கடியால் எவ்விதமோ அப்பெண்ணின் பல் ஒன்று காணவில்லை. தன் வாயினின்றும் பல் ஒன்று காணுததுகண்டு அப்பெண் என் பல் எனக்கு கிடைக்கவில்லையானல் நான் இந்த ஆற்றிலேயே உயிர்விடுவேன் என்று தன் தோழிகளுக்கு அறிவித்தாள் மறுநாள் காலையில் பல்லை ஆற்றோரத்தில் கண்டெடுத்தார்கள்; ஆனல் அப்பெண்ணின் பிரேதமும் அந்த ஆற்றில் மிதக்கக்கண்டனர்,

## காளிதாஸ கவியைப்பற்றிய கதை

### இலங்கையில் தாசியாற் கொல்லப்பட்டாராம்

### கவியரசனேடு உடன் மாண்ட புவியரசன் குமாரதாஸன்

மொகாலனு என்ற சிங்கள மன்னன் ஓர் இந்திய அரசகுமாரியை மணந்து கொண்டான் அவர்களுக்கு குமாரதாஸன் என்ற ஒரு பிள்ளை பிறந்தது குமாரதாஸன் கி. பி. ஆறுவது நூற்றுண்டில் பட்டத்திற்கு வந்தான.

இவன் காலத்தில் இந்தியாவில் விக்கிரமாதித்திய மன்னன், காளிதாஸன் முதலிய கவரத்னங்களுடன் கொலுவீற்றிருந்து அரசபுரிந்து வந்தான். குமாரதாஸன் இந்தியாவிலிருக்கையில் கவி காளிதாஸனுடைய நட்பைப் பெற்றிருந்தான். குமாரதாஸனும் கவி எழுதும் வல்லமை பெற்றிருந்தான். அவன் ஜானகி ஹரணம் என்ற ஒரு காவியம் எழுதியதாகத் தெரிகிறது.

காளிதாஸன்தன் நண்பனுன குமாரதாஸனுடைய ஆஸ்தானத்தைநாடி இலங்கைக்கு வருவதுண்டு. குமாரதாஸனும் காளிதாஸனும் வஸந்தி என்ற வேசியிடத்தில் அன்புகொண்டிருந்தார்கள். அவர்கள் அவள் வீட்டிற்கு அடிக்கடி செல்வதுண்டு

ஒருநாள் மாலை குமாரதாஸன் தனித்துச் சென்றுகொண்டிருக்கையில் ஒரு பொய்கையில் மலர்ந்திருந்த தாமரைப் பூவிலுள்ள தேனை ஒரு வண்டு பருகிக்கொண்டிருப்பதைக் கவனித்தான். சூரியன் மறைந்ததும் தாமரைப்பூ குவிந்து மூடிக்கொண்டது. அரசன் இதை ஒரு கவிதையின் இரண்டு அடிகளாகச் செய்து வஸந்தியின் வீட்டுச் சுவரில் எழுதிவைத்தான்.

பின்பு ஒரு நாள் காளிதாஸன் அந்த வேசியின் வீட்டிற்குச் சென்றபொழுது சுவற்றிலிருந்த அடிகளைக் கண்டு அவற்றின் கீழ் வாஸந்தியின் இதழ்களில் தேன் பருக ஆசைகொண்டு சென்று நாம் இரவெல்லாம் அவளிடம் அடிமைப்பட்டு விடுகிறோம். காலையில் சூரியன தோன்றியவுடன தாமரை மலர்ந்து வண்டு வெளிப்படுதல் போல நாமும் விடுதலை அடைகிறோம். என்ற கருத்துகளடங்கிய இரண்டு அடிகளைச் சேர்த்து அந்தக் கவிதையைப் பூர்த்தி செய்தான் பிறகு காளிதாஸன இந்தியாவிற்குப் போய் விட்டான்.

காளிதாஸன் இரண்டாவது முறை இலங்கைக்கு வந்திருந்த சமயத்தில் வேசியான வாஸந்தி அவனைக் கொலை செய்துவிட்டாள். வேசி வகுப்பினர்க்குரியதான பண ஆசையால் அவள் அவ்வாறு செய்ததாகக் கூறப்படுவது தவறு. அவள் காளிதாஸன்மீது அளவு கடந்த அன்பு கொண்டிருந்தாள். அவன் தன்னைப்பிரிந்து இந்தியாவுக்குச் சென்று விடுவானென்ற பயத்தினல்தான் இந்தப் பாதகமான செயலைச் செய்யத் துணிந்தாள். காளிதாஸன ஒரு ஆஸ்தான வேசியால் கொல்லப்பட்டு உயிர் துறப்பானென அவனுடைய பனைவி சாபமிட்டிருந்தாளாம்.

சிருங்கார ரஸம் ததும்பும் மேகதூதம் என்ற காவியத்தைக்காளிதாஸன் இலங்கையில்தான் இயற்றினனென்றும், அக்காவியத்தில தலைவியாக வர்ணிக்கப்பட்டிருக்கப்பட்டிருப்பது வாஸந்தி யென்றும் கூறப்படுகிறது.

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

## புதுத் தமிழரசி

### தேவியின் திருக்கொலு

—:—

(குறவஞ்சி மெட்டு)

வெற்றிமா சொலித்திடுவோம்,
வீரர்களே வாரீர்!
விழித்தெழுந்தாள் சக்தியன்னை
செழித்ததவச் சுடராய்;
அற்றதிருள் வறுமைதுயர்
அச்சமினி யில்லை;
ஆற்றல்மிகத் தந்திடுவாள்
கூற்றினையும் உதைப்பாள்!

கள்ளவிழும் பூந்துகளை
அள்ளிவருந் தென்றல்,
களிவிருந்துண் டிசையெடுக்கும்
கட்டறியாப் புட்கள்,
ஒள்ளியநல் லோடைகளின்
தெள்ளிய ஓங்காரம்
ஓதிடவே நாதமறை
சோதிவரு கின்றள்!

அருள் பழுத்த பழச்சுவையின்
அரியகனி மொழியாள்!
அருவியெனக் கவிதருவாள்,
அன்புமலர் சொரிவாம்!
இருளரக்கர் நடுநடுக்க
இடிமுரச மார்த்தாள்,
இன்னியர்வாழ் வழிதுலக்கப்
புன்னகையை வார்த்தாள்!

சாதிமத பேதமற
நீதிபுரி யரசி,
சமதர்மக் கொடியுயர்த்திச்
சத்தியக்கோல் பிடித்தாள்;
ஆதிசிவ சக்தியவள்
அறிவலையில் வீற்றள்;
அருளனலுத் திருவிழியால்
கருணைவளம் பொழிவாள்!

கண்ணன்குழல் கேட்டுருகக்
கந்தன்மயி லாடக்
காவிரியாழ் மீட்டுகின்றள்
கலைகளெலாம் பணிய;
தண்கடல்பல் லாண்டிசைக்கத்
தாங்குகின்றள் உலகைத்
தனியியற்கைப் பச்சழகி,
தமிழரசி எந்தாய்!

திருவைகை பருணியொளிர்
சிலம்படியி னருகே,
திகழுகின்ற திலங்கையன்னந்
தவழுகின்ற தின்பம்;
* இருவளைகை லாதுதா,
இளமணக்கால் வீச,
எங்களன்னை விளங்குகின்றள்;
மங்களச்சங் கொலிப்போம்!

வரங்களெல்லாம் வழங்குகின்றள்;
காங்களெல்லாம் குவிப்போம்!
வாழியா சக்தியென்று
மந்திரங்கள் ஜபிப்போம்!
சிரங்களெல்லாம் ஒற்றுமையாய்ச்
சேர்ந்துவழி படுவோம்!
திக்கெல்லாம் எதிரொலிக்க
ஜயகோஷம் புரிவோம்!!

எந்தாய் வாழ்க!

சுத்தானந்த பாரதி.

* மேற்குத் தொடர்ச்சி - கிழக்குத் தொடர்ச்சி மலைகள்.

# சைவர்முன் நிற்கும் பணி

திரு. சி. எம். இராமச்சந்திரச்செட்டியார் சொற்பொழிவு

[ முற்றொடர். ]

தற்கால வாழ்க்கைப்போரிலே வயிற்றுப்பாட்டிற்கு அலைவதைத் தவிரத் தம் மக்களின் படிப்பைக் குறித்துச் சிறிது நேரமாவது ஆலோசிக்கப் பெற்றோர்களுக்குப் பொழுதும் மனோநிலையும் இருக்கின்றனவா? மேலும் பெண் பிள்ளைகள் விஷயத்தில் அதிகமான கவலை இருக்க வேண்டும். ஏனெனில் அவர்களாலல்லவோ அவர்களுக்குப் பிறக்கும் ஆண்பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும் நல்ல நிலைமை பெறுகிறார்கள்? ஆகவே 66,060 இளம் பெண்பிள்ளைகளை எப்படி சமயப் பாடசாலைகளில் வைத்து விட்டால் நம் சமய போதனை அவர்களுக்கு எவ்விதம் கிடைக்கும்?

பாடசாலைகள் வைப்பது மாத்திரமேயன்றி, அவைகளில் போதிக்கக் கூடிய உபாத்தியாயர்களும் தகுந்த பயிற்சி பெறல் வேண்டாமா? கிறிஸ்தவ பாடசாலைகளில் தகுந்த பயிற்சி தருவதற்காகத் தனிக் கிறிஸ்தவ போதனா முறைப் பாடசாலைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

பாடசாலைகளில் பாடம் கற்பிக்கும் நேரம்போக மற்ற ஓய்வு நேரங்களில் இவ் வுபாத்தியாயர்கள் கிராமங்களுக்குச் சென்று பொது மக்களுக்குப் பிரசங்கம், பஜனை முதலியவை மூலமாகச் சமயப் பிரசாரம் செய்கிறார்கள். சைவர்களில் இவ்வித போதனாமுறைப் பாடசாலை ஒன்றேனும் உண்டா? கிராமங்களில் சென்று எந்த ஆசிரியராவது சமய போதனை செய்து வருகிறாரா? ஓர் உதாரணங் கூறுங்கள் பார்ப்போம். போதனா முறை பெறும் உபாத்தியாயப் பிள்ளைகளின் கணக்கை எடுத்துக் காட்டுவோம்

| | | ஆண்பாடசாலைகளில் | | பெண்பாடசாலைகளில் |
|---|---|---|---|---|
| இந்து:— | ஆண் | 63 200 | ஆண் | 3900 |
| | பெண் | 600 | பெண் | 3000 |
| முகமதியர்:— | ஆண் | 3,800 | ஆண் | 76 |
| | பெண் | 10 | பெண் | 600 |
| கிறிஸ்தவர்:— | ஆண் | 14,300 | ஆண் | 450 |
| | பெண் | 2 800 | பெண் | 5000 |
| ஆதிதிராவிடர்:— | ஆண் | 1100 | ஆண் | 26 |
| | பெண் | 23 | பெண் | 50 |

மேற்சொல்லிய புள்ளிகளிலிருந்து 14,750 ஆண்பிள்ளைகளும் 8,400 பெண்பிள்ளைகளும் கிறிஸ்தவர்களில் போதனாமுறை பெறுகிறார்கள் மேலே காட்டிய புள்ளிகளில் இந்துக்கள் பலபேர் இருந்த பொழுதிலும் இவர்கள் சமயப் படிப்பைப் பெறுவதில்லை என்பதை அறிய வேண்டும். நமது தென்னாட்டில் ஒன்றிரண்டு சைவப் பாடசாலைகள் இருப்பதை அறிவோம். ஆனால் அவைகளில் வாசிக்கும் பிள்ளைகள் எத்தனை பேர்? அவர்கள் வாசித்தபிறகு என்ன செய்கிறார்கள்? அப் பாடசாலைகளும் நிரந்தரமாக இருக்கின்றனவா? சிறிது யோசியுங்கள்.

மேலும் சமய போதனைக்கு மிகவும் அநுகூலமாக இருக்கும் வேறொரு சாதனம் சாப்பாட்டு விடுதியே. பாடசாலைகளுக்கு அடுத்தாற்போலப் பிள்ளைகள் வசிக்கவும், வாசிக்கவும் விடுதிகள் ஏற்பட்டிருக்கின்றன. இவ் விடுதிகள் இரண்டு விதமானவை. இடத்திற்கும் சாப்பாட்டிற்கும் பணம் கொடுத்து வசித்து வரும் விடுதிகள் பல உண்டு. அவ்விதப் கொடுக்க முடியாத ஏழைப் பிள்ளைகளின் விடுதிகளும் உண்டு. இவைகளை அனாதை விடுதிகள் என்பார்கள். கிறிஸ்தவ சங்கத்தார்கள் பின் கூறிய விடுதிகளை அதிகமாக ஏற்படுத்தி அவைகள் மூலமாகச் சமயப் பிரசாரம் செய்து வருகிறார்கள். அடியில் கண்டகணக்கு நம் நாட்டு விடுதிகளின் எண்ணிக்கையையும் பிள்ளைகளின் எண்ணிக்கையையும் காட்டும்.

| | விடுதிகள். | | | மாணவர். | |
|---|---|---|---|---|---|
| | ஆண். | பெண். | மொத்தம். | ஆண். | பெண். |
| ஐரோப்பியர் | 16 | 32 | 48 | 1453 | 2039 |
| கிறிஸ்தவர் | 198 | 187 | 385 | 12056 | 11227 |
| ஆதிதிராவிடர் | 39 | 19 | 58 | 2358 | 1098 |
| இந்து | 208 | 24 | 232 | பிரா 3209 | 394 |
| | | | | பி அ.4700 | 1088 |
| முகம்மதியர் | 18 | 4 | 22 | 1313 | 103 |
| | 519 | 265 | 745 | 26035 | 16268 |

மேற்கூறிய கணக்கில் 385 கிறிஸ்தவ விடுதிகளில் 23,283 கிறிஸ்தவப் பிள்ளைகள் வசித்துவருகிறார்கள். இவர்களுக்கெல்லாம் சமய போதனை கிடைக்கும். சாப்பாட்டுக்கில்லாத அனாதைகளான பல இந்துக்கள் இவ்விடுதிகளில் சேர்ந்து பின்னர்க் கிறிஸ்தவர்கள் ஆகிவிடுவது சகஜமே. சைவர்களுக்கு எத்தனை விடுதிகள் உண்டு? எந்த சைவப் பெரியார் இவ்வித விடுதிகளைக் காண்கிறார்? சமய போதனை செய்துவருகிறார்?

இவ்வித கேள்விகளைக் கிளப்பிவிட்டால் நமது பெரியார்கள் "கிறிஸ்தவர்களுக்குப் பண வருவாய் உண்டு; நமக்கு இல்லை; என்னசெய்வது?" என்பார்கள். உண்மையை ஆராய்ந்தால், இவ்வித ஏக்கம் கொள்ள வேண்டிய அவசியமே இல்லை. நம்மவர்களுக்கு ஊக்கம்தான் இல்லை என்று சொல்லவேண்டும். கிறிஸ்தவ சங்கத்தார்களுக்கு அதிகமாக வெளி

(தொடர்ச்சி 7 — ம் பக்கம்)


## கொயிலொன் வங்கி லிமிட்டெட்

1919-ம் ஆண்டு திரபான் கூரில் பதிவு செய்யப்பட்டது.

இலங்கையிலுள்ள கிளை ஸ்தாபனங்கள்:— கண்டி, யாழ்ப்பாணம்

பின்வரும் வட்டி விகிதப்படி பவுண் நகைகள் அடைவு பிடிக்கப்படும்.

20 ரூ முதல் 1000 ரூ வரைக்கு 100க்கு 9வீத வட்டி
1000 ரூ „ 2000 ரூ „ 8 „
2000 ரூ „ 5000 ரூ „ 7 „
5000 ரூபாய்க்கு மேற்பட்டதொகைக்கு 100—6 வீதவட்டி

கொயிலன் பாங்குக்காக
யாழ்ப்பாண ஏஜெண்ட்.

(Q. 101. 6-8 to 5-11-36.)


## அபிஸீனியாவில் இத்தலியர் நிலைமை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காலா வகுப்பினராயினும் சரி அன்னிய நாட்டினரை விரும்பவில்லை. முக்கியமாக அவர்கள் இத்தாலியர்களை வெறுக்கிறார்கள். அபிஸீனியாவின் வளமான பகுதியையும் அபிஸீனியர்களின் ஆயுதங்களையும் பறித்துக்கொள்ளவே இத்தாலியர்கள் வந்திருக்கிறார்களென்று அபிஸீனியர்கள் எல்லாவரும் அறிந்து கொண்டிருக்கின்றனர். இத்தாலியர்கள் சுதேசிகளுடன் கலந்து பழகும் இடங்களில் அவர்களைக் கொடுமையாக நடத்தியும், அவர்களுடைய பொருள்களைக் கவர்ந்தும் அவர்களுடைய வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டிருக்கின்றனர். இதுகாறும் வரை அபிஸீனியர்கள் அறிந்திராத கிறவேற்றுமையும் இப்பொழுது புகுத்தப் படுகிறது.

### துப்பாக்கி மோகம்

தற்சமயம் ஒவ்வொரு எதியோப்பியனும் வருங்காலத்தில் ஏற்படக் கூடிய நெருக்கடியான நிலைமையில் பாதுகாப்புக்காக உதவத் துப்பாக்கிவைத்திருக்கவேண்டுமென்று கருதுகிறான். சக்கரவர்த்தி நாட்டை விட்டோடியவுடன் ஏற்பட்ட குழப்பத்தில் துப்பாக்கிகள் தான் முக்கியமாகக் கைப்பற்றப்பட்டன.

அடிஸ் அபாபாவிலிருந்து யுத்தத்தில் களைப்படைந்து வெளியேறும் துருப்புகளிடமிருந்து எத்திசையிலும் துப்பாக்கி பறிமுதல் செய்யப்பட்டது. இந்தச் சம்பவத்தை ஆதாரமாகவைத்துக்கொண்டு தான் நிருபன் காலா வகுப்பினர் சக்கரவர்த்திக்கு விரோதமாக இருப்பதாகக் கூறினர். உண்மையில் இதற்கும் சக்கரவர்த்திக்கும் மற்ற எந்த வகுப்பினருக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. அன்னிய நாட்டார் வந்து தேசத்தைக் கைப்பற்றிக் கொண்டவுடன் சுய பாதுகாப்புக்காக ஜனங்கள் வழிதேடிக் கொள்ளும் முயற்சியே இதற்குக் காரணமாகும். ஐரோப்பிய நாடுகளிலும் இந்த மாதிரிச் சந்தர்ப்பங்களில்இதேபோலப் பொதுஜனங்கள் ஆயுதம் தேடிக்கொள்வது இயல்பு

### ஒற்றுமையை நிலைநாட்ட

பழைய துருப்புக்கள் வீட்டிற்குச் சென்ற பிறகு கனத்த மழை பெய்ய ஆரம்பித்தவுடன் இந்தக் குழப்ப மெல்லாம் மறைந்துவிடும். மறுபடி பழைய ஒற்றுமையின் அம்சங்கள் தலையெடுக்கும். இந்த ஒற்றுமை எதியோப்பியத் தலைவர்களால் ஏற்பட முடியாது. அவர்கள் தங்களுக்குள்ளிருக்கும் அபிப்பிராய பேதத்தைப்பற்றி ஓயாமல் பேசியே காலத்தைப் போக்குவார்கள். இந்தப் பேச்சுக்களை அடக்கி ஜனங்கள் என்ன செய்யவேண்டுமென்பதைத் திட்டமாகச் சொல்லக்கூடியவர் சக்கரவர்த்தி ஒருவர் தான். அவர் தம் நாட்டிற்குத் திரும்பிச் சென்றால் அங்கு இயற்கையான ஒற்றுமையை நிலைநாட்ட முடியும்.

### இத்தாலியர்களுக்கு வசதிகள் இல்லாத பிரதேசம்

அடிஸ் அபாபாவுக்கு மேற்கே நூறு மைல்களுக்கப்பால் அடர்ந்த காடு ஆரம்பமாகிறது. வலிகா மாகாணத்தின் மேற்குக் கோடியில் கோரகாரத்திற்கருகில்தான் அடர்ந்த காடு முடிவடைகிறது. இந்தப் பரந்த பிரதேசத்தில் வெயில் காலத்திலும் மூடுபனி சூழ்ந்திருப்பதால் விமானங்களின் மூலம் வேவுபார்ப்பது சாத்தியமில்லை. துருப்புக்கள் பெரிய பட்டாளமாகச் சேர்ந்து செல்லாமல் சிறுபகுதிகளாக இடம் விட்டு இடம் மாறினால் அவைகளின் போக்குவரத்தை அறிந்து கொள்வது மிகக் கடினம். இங்கு மோட்டார் பாதைகள் கிடையா. இத்தாலியர்கள் வடபகுதியில் அதிதுரிதமாக ரோடுகள் அமைக்கவும் துருப்புகளைக் கொண்டு வந்து குவிக்கவும் ஆயிரக் கணக்கான சனங்களை விஷ வாயு மூலம்கொல்லவும் பெற்றிருந்த வசதிகள் ஒன்றுமே இங்கு கிடையாது. மேலும் இந்தப் பகுதி வளமுள்ளதாதலால் துருப்புக்கள் குடியானவர்களைச் சிரமப்படுத்த வேண்டிய அவசியமின்றித் தேவையான அளவு உணவுப் பொருள்களைப் பெற முடியும். வேறு பகுதிகளில் எவ்விதக் குழப்பமுமின்றி இத்தாலியர்கள் ஒருமுகமாக முயற்சி செய்த போதிலும் அபிஸீனியாவின் மேற்படி மேற்குப் பகுதியை அவர்கள் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வரப் பல வருடங்களாகும். இந்தப் பிரதேசத்தில் உள்ளவர்களிடையே இத்தாலியர்களை எதிர்க்க வேண்டுமென்ற உணர்ச்சி அதிகமாக மேலோங்கியிருப்பதால் இத்தாலியர்களுக்கு விரோதமாக வேலை செய்ய இது மிகவும் ஏற்ற பிரதேசமாக விளங்குகிறது.

### என்ன செய்ய வேண்டும்?

இந்த மழை காலத்தில் எதியோப்பியர்கள் தீவிரமாக எதிர்த்து வேலை செய்ய முடியும். அடிஸ் அபாபாவுக்கு வடக்கே உள்ள துருப்புக்களை முற்றிலும் எதிர்த்துத் தலைநகரைத் தனிமையாக நிற்கும்படி செய்வதே அவர்கள் நோக்கமாக இருக்க வேண்டும். அடிஸ் அபாபாவிற்கு உணவுப் பொருள் வர முடியாதபடி ஜிபூதி ரயில்வேயைச் சேதப் படுத்தவேண்டும். ஏற்கனவே தலைநகருக்கு 50 60 மைல்களுக்கப்பால் சில சேதங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் அவைகளினால் பயனேற்பட முடியாது ரயில்வேப் போக்குவரத்து ஒருமாத காலத்திற்காவது நின்றுபோகும்படியும் இத்தாலியர்கள் சுலபமாகப் பழுதுபார்க்க முடியாதபடியும் ரயில்வேயில் பலமான சேத மேற்படுத்தப்பட வேண்டும்.

### இத்தாலி படிப்படியாக முந்துவிடும்

இதற்கு ஒற்றுமையாக வேலை செய்ய வேண்டும். சக்கரவர்த்தியின் தலைமையில்தான் இந்த ஒற்றுமை ஏற்படக்கூடும். யுத்தத்தில் தோல்வியடையாத எத்தனையோ வீரர்களும் தலைவர்களும் பலைப்பிர தேசங்களிற் போர்புரியத் தயாராயிருக்கின்றனர். எதியோப்பாவில் இத்தாலியின் ஆதிக்கம் நிலைத்துவிடவில்லை. அதன் நிலைமை உறுதியற்றதாகவே இருக்கிறது. வல்லரசுகளின் சகாயத்தினால்தான் இத்தாலி அடிஸ் அபாபாவில் தற்சமயம் ஆதிக்கம் பெற்றிருக்கிறது. வல்லரசுகளின் உதவியிருந்தாலும் கூடச் சக்கரவர்த்தி திரும்பி வந்து அவருக்குத்தட்டின்றி ஆயுதங்களும் கிடைப்பதாயிருந்தால், அடுத்த அக்டோபர் மாதத்திற்குள் எதிர்ப்பு மிக வலுவடைந்து அடிஸ் அபாபாவின் நிலைமையும் ஸ்திரமற்றதாகி விடும். இத்தாலி அபிஸீனியாவை காலடையிற் படிப்படியாக இழந்துவிடும்.

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1833-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் கோட்டடி மா. கு. தெண்டாயுதபாணி கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்பட வேண்டிய நகைகளின் விபரம்.

1935-ம் ஆண்டு மார்ச் மாசம்

| நம் | உ | ரு | | பெயரும் ஊரும் நகைகளின் விபரம் |
|---|---|---|---|---|
| K444 | 20 | 10 | | போ இந்தினி நாச்சிமாகோயிலடி வெள்ளை கல் தோடு 2 |
| 460 | 21 | 6 | | ஐ பசுபதி புங்குடுதீவு அச்சாக்கூடு 1 |
| 461 | 21 | 100 | | இ. நாகலிங்கம் மண்டைதீவு பதக்கத்துடன் முறிச்சுக்குத்தி அட்டியல் 1 |
| ஏப்பிரல் மாசம் | | | | |
| 802 | 5 | 11 | | ச ஐயாத்துரை ஐயர் சுன்னுகம் மோதிரம் 1 |
| 863 | 8 | 10 | | மீ செயினுமுகம்மது சோனகதெரு கற்தோடு 2 |
| 900 | 10 | 85 | | வி குட்டி புத்தூர் பதக்கத்துடன் பூரான் அட்டியல் 1 |
| 1027 | 17 | 8 | 03 | மு துரையப்பா பூனகரி கல்தோடு 2 |
| 1080 | 19 | 18 | 03 | S சுந்தரம் கோட்டடி பூ 1 மோதிரம் 4 |
| 1284 | 30 | 7 | | சி செல்லத்துரை நவாலி குப்பிக்கடுக்கன் 2 |
| மே மாசம் | | | | |
| 1340 | 2 | 11 | 03 | இ சுப்பிரமணியம் அராலி கல்தோடு 2 |
| 1360 | 3 | 12 | | மு நாகமுத்தன் வேலணை துவளைக் கடுக்கன் 2 |
| 1396 | 5 | 8 | | மு கச்சுநாறு சோனகதெரு கல்மோதிரம் 1 |
| 1453 | 8 | 6 | | ம கித்தோறியா நாவாந்துறை தாகபடம் 2 |
| 1468 | 8 | 50 | | ம் சேதுமுகம்மது சோனகதெரு பொன்சவடி 1 |
| 1589 | 12 | 6 | | சி உசன் செம்மாதெரு கம்பி அலுக்குத்து 4 |
| 1718 | 16 | 7 | | சு செல்லையா தின்னவேலி கூடு 1 |
| 1742 | 18 | 12 | | வ சின்னத்துரை கொழும்புத்துறை சிறுகாப்பு 2 |
| 1746 | 18 | 5 | | மீ முகம்மதுசரிபு சோனகதெரு முத்துத்தோடு 2 |
| 1818 | 21 | 50 | | இ சின்னப்பு ஆனைக்கோட்டை மிளகு காப்பு 2 |
| 1844 | 22 | 7 | | சி செல்லத்துரை சிப்பித்தறை குப்பிக்கடுக்கன் 2 |
| 2002 | 31 | 10 | | க நாகனுதி புங்குதீவு கல் தோடு 2 |
| ஜூன் மாசம் | | | | |
| 2060 | 3 | 80 | | க இராமலிங்கம் சிறும்பியடி இரண்டு பட்டுக்குண்டுச்சங்கிலி 1 |
| 2175 | 9 | 15 | | நா செல்லத்துரை வேலணை கவுத்தோர் 1 |
| 2203 | 11 | 12 | | S சுல்த்தான் அப்துல்காதர் சோனகதெரு மணிக்கோர்வை 1 |
| 2257 | 15 | 6 | 50 | அ வயிரவன் ஆனைக்கோட்டை கல்தோடு 2 |
| 2258 | 15 | 5 | | சு பொன்னம்மா அல்லப்பிட்டி கல் தோடு 2 |
| 2287 | 17 | 80 | | வ வேலுப்பிள்ளை வட்டுக்கோட்டை பதக்கதுடன் டைமன் அட்டியல் 1 |
| 2402 | 23 | 230 | | இ கந்தையா வேலணை முறிச்சுக்குத்தி கொடி 1 |
| 2422 | 24 | 15 | | சே ஐயாத்துரை அல்லப்பிட்டி வளசில் தகடு 8 காவடி 7 |
| 2450 | 25 | 15 | 03 | சி முத்துவேலு கோட்டடி சிறுகாப்பு 2 |
| 2500 | 28 | 15 | | S கந்தையா அராலி வாளி 1இ காதுப்பு 2 குப்பி 2 |
| ஜூலை மாசம் | | | | |
| 2630 | 3 | 90 | | மு நாகலிங்கம் நயினதீவு பதக்கத்துடன் சஅட்டியல் 1 |
| 2677 | 6 | 80 | | மா நாகலிங்கம் கோட்டடி பொன் கொடி 1 |
| 2682 | 6 | 15 | | வே முத்துக்குமாரு புங்குடுதீவு சிறுகாப்பு 2 |
| 2732 | 8 | 5 | | க சின்னம்மா கோட்டடி கல் காதுப்பு 2 |
| 2747 | 8 | 14 | | நா ஆறுமுகத்தான் கோட்டடி கூடு 1 |
| 2790 | 10 | 10 | | நா நல்லதம்பி கோட்டடி கவுத்தோர் 1 |
| 2823 | 12 | 15 | | இ தறுமலிங்கம் புங்குடுதீவு குண்டுடன் அரைப்பவுண் 2 |
| 2963 | 18 | 12 | | பே சவுரிமுத்து நவாலி கல்தோடு 2 |
| 3095 | 24 | 120 | | மா விசுவலிங்கம் கோக்குவில் குழல் மு. கொடி 1 |
| 3098 | 25 | 6 | | பு வயிரவன் கோட்டடி தனிப் பதக்கம் 1 குச்சி 1 கல்வாளி 2 |
| 8179 | 28 | 304 | | L P இராசசூரியா மானிப்பாய் பென்டன் 1 தாலியுடன் சங்கிலி 1 கல் அட்டியல் 1 |
| 3184 | 29 | 9 | | க செல்லத்தம்பி மண்டைதீவு கல்தோடு 2 |
| 3216 | 30 | 9 | 03 | மு பொம்பலம் கோட்டடி மோதிரம் 1 |
| 3237 | 31 | 500 | 03 | ச கனகரெத்தினம் தெல்லிப்பழை இரண்டு பட்டு சங்கிலியுடன் பெரியபதக்கம் 1 வயிர கல்தோடு 2 |
| 3238 | 31 | 15 | | வே யோசேப்பு நாவாந்துறை பின்கொக்கி 1 |

விப்பனவு தாதுஸ்ரூ ஆவணிமீ 29ந் திகதிக்குச் சரியான (13-9-36) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி தொடக்கம் எடுபட்டநகை புறநீங்கலாக மிகுதி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை உடையார்
வெந்திஸ்மேஸ்தர்

(Mis 120 24 & 27/8/36)

# “...ன்தேசாந்திரியாய்ச் சாகப்போவதில்லை”

## ‘‘சமர்செய்து நாட்டை மீட்பதே என்கடமை’’

## சக்கரவர்த்தி அபிஸீனியாவிற்குமீள நோக்கங் கொண்டனர்.

அபிஸீனிய சக்கரவர்த்தி தம்முடைய வாஸஸ்தானத்திலே கபலமைப் போய்க்கண்ட ஒரு பத்திரிகை நிருபருக்குப் பின்வருமாறு கூறியுள்ளார்:—

நான் இப்படித் தேசாந்திரியாய்த் திரிந்து இறப்பேனென்று எண்ண வேண்டாம்! தென்மேற்கு அபிஸீனியாவிலுள்ள என் பழைய சைநியத்தை மீளத்திரட்டி நிலவித்து என்னாட்டின் வடிதலையின் பொருட்டு விரைவில் யுத்தந்தொடங்கப்போகின்றேன்; நாட்டை மீட்டொழிய யுத்தஞ் செய்வதை நான் விடப்போவதில்லை; ஜெனிவா சர்வதேசசங்கத்தார் நான் கடன் கேட்டபோது இல்லையென்று சொல்லிவிட்டார்கள். ஆனால் வேறு இடத்திற் போதிய பணம் பெறுதற்கான ஒழுங்கு செய்திருக்கிறேன்; பணஞ் சேர்ப்பதற்காக ஒரு நிர்வாகசபையை ஏற்படுத்தியிருக்கிறேன்; அச்சபையார் நல்ல வேலை செய்கின்றனர். எனது சைநியங்களுக்குப் போதிய உணவு தேவையான போருக்குரிய உபகரணங்களும் விரைவிற் கிடைத்தற்கான ஒழுங்குகள் உண்டு;

என்னாட்டினை விட்டுத் தப்பியோடி வந்துவிட்டேனென்று உலகத்திலே என்மீது அபவாதஞ் சுமத்துகின்றார்கள்; அப்படியான அபவாதத்தை நான் கேட்க நியாயமில்லை; நான் கேட்டது சர்வதேசசங்கத்தையும் அவர்களுடைய உடம்படிக்கைகளையும் நம்பியதனாலாகும்; சர்வதேசசங்கக் கூட்டத்தில் என் குறைகளை நான் எடுத்துச்சொன்னபோது எல்லாரும் சரியென்று சொல்லி மெச்சிப் பாராட்டினார்கள்; ஆனால் உதவி கேட்டபோது எல்லாரும் ஒருங்கு ‘‘அல்லத்தட்டி’’ விட்டார்கள். மழைக்காலம் முடிவதற்கு இன்னமும் இரண்டு மாசங்கள் உண்டு; இந்த இருமாச காலத்துள் என் சைநியத்தைச் சேர்த்துப் பகைவருடன் சமர் தொடங்கவேண்டியதே; இத்தலியர் நச்சுக் காற்றைக் கொண்டும் வேறு வகையாலுஞ் செய்த அக்கிரமங்களை என் சனங்கள் இலகுவில் மறக்கப்போவதில்லை. ஆகலால் யுத்தமென்று நான் தெரிவித்த மாத்திரத்தே என்னாட்டினரெல்லாரும் யுத்தசன்னத்தராய் என்னை வந்து சூழ்ந்து தம் நாட்டின் மீட்சியின் பொருட்டு எனக்குத் துணை புரிவார்களென்பது நிசம். அப்பொழுது என் சனங்களுடன் தோளோடு தோள் நின்று யுத்தஞ் செய்வேன்.’’

### 5–குழந்தைகள் பிறந்த அதிர்ஷ்டம்

கனடா தேசத்தில் ஒண்டோருயா நகரில் ஒரே ஒரு சூலில் 5-குழந்தைகள் பிறந்தன. இந்த ஐந்து குழந்தைகளையும் சினிமாவில் படம்பிடிக்க ‘‘ஹோலிவுட்’’ சினிமாக்காரர்கள் ஏற்றுக்கொண்டு தாய் தகப்பனுக்கு ரூபாய் 200,000 கொடுத்துப் படமும் எடுக்க ஆரம்பித்து விட்டார்கள். மின்சார ஒளியினாலும் இதரகாரணங்களினாலும் குழந்தைகளுக்குத் தீங்கொன்றும் ஏற்படாதிருக்கவொவ்வொரு குழந்தையையும் ரூ20,00,090த்திற்கு இன்ஷூர் செய்திருக்கிறார்கள். இக் குழந்தைகளின் உடல் நலன்களை அப்போதைக்கப்போது கண்காணித்துக்கொள்ள ஒரு பெரிய டக்டரையும் நியமித்துள்ளார்கள். படம் பிடிக்கும்போது இக் குழந்தைகளால் யாதொரு தொந்தரவும் உண்டாவதில்லையாம். அவைகள் விளையாட்டுக் கருவிகளுடன் சாந்தமாக விளையாடிக் கொண்டிருக்கின்றனவாம். இக் குழந்தைகளுக்கு வயது இப்பொழுது இரண்டாகிறது.

### தூங்கும் பாக்யம் இல்லை

#### கல்கத்தா தனவந்தரின் கஷ்டங்கள்

கல்கத்தா ஆக 17உ

2 வருஷ காலமாகத் தூக்கம் பிடிக்காமல் கஷ்டப்பட்டு வந்த ராவ்பகதூர் ராம்ஜீதாஸ் பஜோரியா தமக்குத் தூங்கும் பாக்கியம் சித்திக்குமாறு செய்கிறவர்களுக்கு 20000 ரூபாய் இனம் கொடுப்பதாக அறிவித்திருந்தார். இப்பரிசுபெறுவதற்காக உலகின் பல பாகங்களிலிருந்தும் பல துறைகளிலுமுள்ளவர்கள் அவருக்கு ஆலோசனைகளைக் கூறவும் மருந்துகளை அனுப்பவும் ஆரம்பித்தனர். ஆனால் மிக்க வைதீகரான ராவ்பகதூர் பஜோரியா அவற்றிலெதையும் உபயோகிக்க முடியவில்லை பல வைத்தியர்கள் இந்தியாவுக்கு வந்து அவரைச் சொஸ்தப்படுத்தத் தயாராக இருப்பதாகத் தந்தியடித்தார். பலர் தங்களுக்கு வெகுமதி வேண்டாமென்றும், கஷ்டப்படுகின்ற ஒரு சோதரப் பிரஜையின் கஷ்டத்தை நீக்கினேனும், என்ற திருப்தியே தங்களுக்குப் போதுமெனவும் சொல்லி ராவ்பகதூருக்கு யோசனைகளைக் கூறினர்.

லண்டனைச் சேர்ந்த மின்சார வைத்தியக் கருவிகளைச் செய்யும் ஒரு கம்பெனியார் கூறியபடி ராவ்பகதூருக்குச்சிகிச்சை செய்யப்பட்டது. ஒருவரின்யோசனைப்படி சரீரமும் பிடித்து விடப்பட்டது. இதனால் 2 வருஷமாகத் தூங்காத ராவ்பகதூர் தற்போது தூக்கம் பிடிக்க ஆரம்பித்திருக்கிறார். அவர் நீடித்துத் தூங்க ஆரம்பிக்கவில்லை. சிறிது நேரமே தூங்குகிறார். அவர் தற்போது விட்டு விட்டுத்தூங்க ஆரம்பித்திருக்கிறார். இதனால் அவருக்கு பலமும் வியாதி தீர்ந்துவிடுமென்ற நம்பிக்கையும் ஏற்பட்டிருக்கிறது. தற்போது ராவ்பகதூரின் கவலை நீங்கிவிட்டது.

### இன்னுஞ்சில இங்கே வருமா

இலங்கையின் இறுதித் தமிழரசனாகிய ஸ்ரீ விக்கிரமராசசிங்க மன்னன் வைத்தாண்ட சிம்மாசனம் முடி பாதபீடம் என்னுமிவைகள் இற்றைக்குச்சில வருடங்கட்குமுன் இங்கிலாந்திலிருந்து கொண்டு வந்து இலங்கை மகிமன் பார்க்கவைத்தபின் கொழும்பு நூதனசாலையிற் பாதுகாப்போடுவைக்கப்பட்டுள்ளனவல்லவா அந்த மன்னனுடைய அரச அட்டமங்கலங்கள் செங்கோல் வாள் சாமரை யென்னுமிவைகளையும் இலங்கைக் கல்வி நிர்வாகசபையாருடைய கேள்விக்கிசைந்து இங்கிலாந்திலுள்ள அதிகாரிகள் விரைவில் இங்கே அனுப்பிவைப்பார்களாம். இப்பொருள்களுட் சாமரைதவிர ஏனையவை உவின்ஸர் கோட்டையில் இருக்கின்றனவாம்.

### பலஸ்ரயின் கலகம்

பின்னரும் அராபியர் அரசின்படையாற் கொல்லப்பட்டனர். ஹெப்ரு என்ற இடத்தில் நடந்த யுத்தத்திலே இற்றைவரையில் 32 அராபியர் கொல்லப்பட்டனர்.

### ஜெர்மனியில் புரு ஒற்றர்கள்

ஜெர்மென் அரசாங்கத்தார் இரகசியவேவுகாரர் இலாகாவில் புறக்களை வளர்த்து வருகின்றார்கள் அவைகளின் அடிவயிற்றில் படம்பிடிக்கும் ‘காமிராவை’க்கட்டி அந்நியதேசங்களுக்குப் பறக்க விடுகிறார்கள். அப்புறுக்கள் பறந்து செல்லும்போதே அப்பிரதேசங்களின் பலபாகங்கள் வரிசைக்கிரமமாகப் படம் எடுக்கக் கூடியது. புறுக்கள் திரும்பி வந்ததும் ராணுவ அதிகாரிகள் படத்தைப் பரிசோதித்து உளவு அறிகின்றனர்;

### கந்தசுவாமி கோவிலில் திருட்டு

#### குறவனுக்கு 6 மாதக் காவல் தண்டனை

யாழ்ப்பாணம் 20

யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில், இராமசாமி செல்லையா என்ற குறவன்மீது சுன்னாகத்தைச் சேர்ந்த எல்லுப்போலை பெண் பார்வதியினது இடுப்பிலிருந்த கைக்குழந்தையின் காப்பொன்றைச் சென்ற 16ந்திகதியன்று இரவு 7-30 மணியளவில் நல்லூர்க் கந்தசுவாமிகோவிலுக்கு முன்னர்த் திருடியதாகத் தொடரப்பட்ட வழக்கு இன்று விசாரணைக் கெடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்காளி சார்பாக பொலிஸ் சார்ஜன்ட் T. N. அப்சாவும் எதிரி சார்பாக நியாயவாதி விக்டர் போலும் வாதித்தார்கள்.

எதிரி கூறியதாவது:—

நான் நல்லூர்க் கந்தசுவாமிகோவிற் பத்தாம திருவிழாவுக்குச் சென்றேன். அங்கு நான் கும்பிட்டுக் கொண்டிருக்கையில் பொலிஸ் கொன்ஸ்டபின் ஒருவர் என்னைப் பிடித்தார். அப்போது அங்கு நின்ற ஓர் பெண் தன் காப்பைத் திருடியதாகக் கூறினாள். அவர்கள் என்னைச் சோதனை செய்து என்னிடமிருந்து காப்பைக் கண்டெடுக்கவில்லை. என்னை அங்குள்ள ஓர் பள்ளிக்கூடத்துக்கு அழைத்துச் சென்றனர்

இதன்பின் இவ்வழக்கில் சாக்ஷியம் கூறிய சிறுவன் ஓர்காப்பைக் கொண்டுவந்து பொலிசாரிடம் கொடுத்தான் தான் அக்காப்பை நிலத்திற் கிடந்து எடுத்ததாகத் தெரிவித்தான். பொலிசார் என்னைப் பிடிக்கும்போது அந்தச் சிறுவன் அங்கு நிற்கவில்லை.

பொலிஸ் சார்ஜன் அப்சா எதிரி முன்னும் இரு குற்றச்சாட்டுகளில் மறியலுக்குச் சென்றவனெனக் கூறினார் நீதிபதி எதிரிக்கு ஆறுமாத மறியலும் ஒருவருஷப் பொலிஸ் காவலுமெனத் தீர்ப்புச் சொன்னார்.

### கோண்டாவிலில் தாலிக்கொடித்திருட்டு

#### வழக்காளி கூறிய சாக்ஷியம்; தீர்ப்பு அடுத்தமீ 1ந் திகதி

கோண்டாவில் டிக்கட் ஏஜெண்ட் வி. செல்வரத்தினமென்பவர் தனது வேலைக்காரனாகிய இந்தியன் இராமசாமியைத் தனது வீட்டிலிருந்து தாலிக்கொடி ஒன்றைக் களவாடியதாகக் குற்றஞ்சாட்டிய வழக்கு யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்காளியாகிய வி. நயரத்தினம் கூறியதாவது:—

சென்ற ஆடிமீ 24-ந்திகதி பிறபகல் 11—மணியளவில் என் மனைவி தாலிக்கொடி காணமற்போனதை அறிவித்தாள் நான், இச்சமபவத்தைப் பொலிசாருக்கு அறிவித்தேன். எதிரி எனது வேலைக்காரன். இவன் தான் தாலிக்கொடியை எடுத்து வாமதேவா என்பவனிடம் கொடுத்ததாகச் சொன்னான். வாமதேவாவிடம் பொலிசார் சென்று இதைப்பற்றி அறிந்தனர். வாமதேவாவும் தான் வாங்கியதாக ஒத்துக்கொண்டான் தாலிக்கொடியின் பெறுமதி ரூபா 370– தாலிக்கொடி கண்டெடுக்கப்படவில்லை.

நீதிபதி கேட்டபோது சாக்ஷி கூறியதாவது:—

நான் ஐயுறவால்தான் இவனைக் கேட்டேன். உண்மையைக் கூறினால் வழக்குவைக்கவில்லை என்றும் சொன்னேன்.

இதன்பின், எம். ஏ. நிரிவாதனு சாக்ஷியம் கூறினார்

எதிரி தான் குற்றவாளியெனக் கூறினான். எதிரியின் கையடையாளம் எடுக்கப்பட்டது. தீர்ப்பு1-9-36 சொல்லப்படும்.

# “பெண் ஜென்மம் பொல்லாது”

(நடந்த கதை)

[திருவெண்ணெய் நல்லூர் கிருபாசிரமத்தைச் சேர்ந்த ஸ்ரீமதி சகுந்தலா குர்ஜாலி எழுதியது]

‘‘சாங்கியாலம் அஞ்சி மணிக்கு ..........னர்லே மடத்தண்டே ஒரு கூட்டம் கூடுது. காங்கிரஸ் பெரிமனுஷாள் வர்ராங்க. எல்லாரும் வரலாம்’’ என்று வாய் இருந்தாமல் ஒருவன் பறை மேளம் அடித்துக் கொண்டு சொல்லிக்கொண்டே கிராமம் கிராமமாய்ப் போகிறான். எங்கள் வீதி வழியாய்ப் போய்க்கொண்டிருக்கையில் ‘‘ஏண்டா, யார்ரா வர்ராங்க’’ என்று ஒரு நடு வயது மங்கை கேட்கலானாள்; அம்மா பாரோ காங்கிரஸ் பெரிய மனுஷாள் வர்ராங்க! என்று சொல்லிக் கொண்டே போய் விட்டான்.

மனம் குழம்பியிருந்த அலமுவுக்கு இது ஒரு பாக்குக் கிடைத்தது அவள் இதுவரையில் ஒரு கூட்டத்துக்கும் போனது கிடையாது. இன்று கூட்டத்திற்குப் போவதென்று நிச்சயித்தாள். எங்கள் ஊருக்கும் கூட்டம் நடக்கும் ஊருக்கும் மூன்று மைல். மாலை வேளைவிடு நேரம் அலமு புறப்பட்டாள். அவளோ நல்ல பட்டுப் புடவை உடுத்தி, தலைவாரி, பூ முடித்து வாய் சிவக்க வெற்றிலை போட்டுக் கொண்டு ஒய்யாரமாய் நடந்தாள். தெருவிலுள்ளவர்கள் அவளை ஆச்சரியத்துடன் பார்த்து ‘‘அடி, பார்த்தியா அவளே, கொஞ்சமாவது வெக்கம், சிக்கம் ஏதாவது இருக்கா பாரு. அந்த ஜன்மத்துக்குப் பூ வேறே, பட்டுப் புடவை வேறே, வெற்றிலை பாக்கு வேறேயா? அவ என்ன பெண்ணடி, பிசாசு’’ என்றாள் எங்கள் எதிர் வீட்டுக் காமு. தெருவில் எதிரே வந்த பூங்காவனம் அவளைப் பார்த்து, ‘‘ஏண்டியம்மா, உனக்கென்னடி இந்த வாழ்வு வந்துட்டுது? உனக்குப் பெண் சொரணை கொஞ்சங்கூட இல்லையே, போடி தட்டுவாணி’’ என்று சொல்லிக் கொண்டே போனாள். இவை எல்லாம் கேட்ட அலமு குலுங்கக் குலுங்கச் சிரித்துக் கொண்டு இன்னும் ஒய்யாரமாய் நடக்கலானாள். அலமுவின் நடத்தை அன்று புது மாதிரியாய் இருந்தது. இது சமயம் அவள் மேல் பல காளையர் நாட்டங் கொண்டிருந்தனர். இதுவரை அவர்களுக்கு அவளை அணுக இயலவில்லை இன்று அவள் நடத்தை அனைவர்கள் மனதிலும் ஓர் நம்பிக்கை யுண்டாக்கியது. அவர்கள் கிட்டாக் கனியை எட்டிப் பிடித்ததாகவே திருப்தியடைந்தனர்.

............னரில் கூட்டம் முடிய இரவு மணி 9 ஆயிறது. கூட்டமும் கலைந்தது. அனைவரும் அவரவர்கள் ஊர் திரும்பினர். அலமுவும் புறப்பட்டாள். மத்தியானம் பறை பறைந்து விளம்பரஞ் சொன்னவனை இடை வழியில் அவளைக் கண்டான். அப்போது அலமு அவனைப் பார்த்து ‘‘யார்ரா சாம்பான், நம்மூர் தானேடா நீ, இந்தக் கடுதாசி கொண்டு போய்க் காலமே மணிகாரங் கிட்டெ குடு. இந்தா உனக்கு அரைஅணா’’ என்று அரைஅணாக் கொடுத்தாள். பாவம் சாம்பான் ‘‘எம்மா, தனியா இந்த நேரத்திலே எதுக்கம்மா போறே’’ என்றான். ‘‘நான் போறேன் எங்கப்பா வூட்டுக்கு’’ என்று சொல்லிக்கொண்டே அவள் கிழக்கு நோக்கிச் சென்றாள்.

காலை 8 மணியிருக்கும், போலீஸ்காரர் ஆறுபேரும் ஒரு சப் இன்ஸ்பெக்டரும் மணியகாரர் வீட்டுக்கு வந்தார்கள். அப்போதுதான் பறை அடிப்பவனும் கடிதம் கொண்டு வந்து கொடுக்க அதை வாசித்துக் கொண்டிருந்தான் மணியகாரன் போலீசாரும் வந்து அவர் வீட்டில் நிறைந்து மணியகாரரைக் கைது செய்தனர். அவர் வாசித்துக் கொண்டிருந்த கடிதமும் கைப்பற்றினர்.

மறு நாள் காலையில் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் கேஸ் நடந்தது. அலமு ஒரு புறம் கைதியாகவும், மற்றொரு புறம் மணியக்காரன் கைதியாகவும் கொண்டுவரப்பட்டனர். மாஜிஸ்ட்ரேட் அலமுவைப் பார்த்து ‘‘நீ தற்கொலை செய்துகொள்ள முயன்றதாக உன்மேல் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. காரணம் கூறுவாயா?’’ என்றார். அலமு சாஷ்டாங்கமாய் நமஸ்காரம் செய்து பின்வருமாறு தனது வாக்குமூலம் கொடுத்தாள்.

‘‘ஐயா, தாங்கள் தான் இன்று என் தெய்வம். ஆதலால் ஒளிமறைவு கொஞ்சமும் இல்லாது எல்லாம் சொல்லிவிடுகிறேன். பிறகு இந்த உலகத்தில் நான் வாழ்ந்து நடக்கவேண்டிய காரியம் ஒன்றுமில்லை. என்னைக் கொன்றுவிட்டால் பூமாதேவிக்கு இந்தப் பாவியின் பளுவு குறையும். பெண் ஜென்மம் பொல்லாது, பொல்லாது, மிகவும் பொல்லாது.

‘‘நான் — ஊர்ப் பஞ்சாங்கக்காரர் மகள். எட்டுவயதில் கலியாணம் ஆச்சு. பத்து வயதில் புருஷனை இழந்தேன் பதினைந்து வயதிலே பெரியவளானேன் எனக்கு மூன்று சகோதரிகள். நான் தான் கடைக்குட்டி. அவர்கள் எல்லாம் பூவும், புருஷனுமாக இருப்பதும் நான் இப்படி அவதிப்படுவதும் என்னால், எவ்வளவு சகித்தும் முடியவில்லை. என் தகப்பனார் ராஜு என்ற வேலைக்காரன் ஒருவனை மூட்டை தூக்க வைத்திருந்தார். அவன் வயசு 20 இருக்கும். நல்ல அழகுள்ளவன். எப்படியோ எங்கள் மனம் ஒத்துப் போச்சு. கொஞ்ச நாள் கழித்து நான் கர்ப்பமாய் விட்டேன். என் தாய், தந்தை, சகோதரிகள் எல்லாரும் என்னை அடித்தார்கள். அது முதல் கொடுமைக்கு அளவில்லை. ஏதோ மருந்தும் கொடுத்து அதைக் கலைத்து விட்டார்கள். அப்புறம் என்னை வேலைக்காரி மாதிரி நடத்தி வந்தார்கள். நான் வீட்டை விட்டு ராஜுவுடன் போய் விடுவதாகச் சொன்னேன். என்னை அவர்கள் படாதபாடு படுத்தினார்கள். ஜெயில் மாதிரி வைத்திருந்தார்கள்.

இப்படியிருக்க மணியகாரர் நாயக்கர் எங்கப்பாவுக்கு 100 ரூபாய் கடன் கொடுத்திருந்தார். அதைத் திருப்பிக் கொடுக்க அப்பாவைத் தொந்திரவு செய்தார். ஒருநாள் எங்கப்பா என்னை மணியகாரர் வீட்டுக்குப் போய்க் கொஞ்சம் பக்ஷணம் கொடுத்துவரச் சொன்னார். அன்று ‘கிருஷ்ண ஜெயந்தி’ மணியகாரர் வீட்டில் யாருமில்லை. அவர் மாத்திரம் இருந்தார். நான் போனவுடன் அவர் என்னிடம் என்னென்னவோ சொன்னார். அதெல்லாம் எனனால் செல்லவும் முடியவில்லை. நான் முடியாதென்று சொல்லிவிட்டேன். பிறகும் அவர் என்னைப்பிடித்துத் தொந்திரவு செய்தார். நான் தப்பித்துக் கொண்டு வந்துவிட்டேன். நான் வீட்டுக்கு வந்து என் தாயிடம் சொன்னேன் என் தாய், தந்தை, சகோதரிகள் எல்லோரும் என்னைப் பலமாகிரித் திட்டித் தட்டுவாணிக்கு எங்கேயோ கொறைஞ்சு போச்சாக்கும்’’ என்று சொன்னார்கள். அன்று முதல் பல தடவைகள் என் தகப்பனார் என்னை மணியகாரர் வீட்டிற்குப் போகும்படி வேலையிடுவார். நான் முடியாது என்று கண்டிப்பாய்ச் சொல்லிவிடுவேன். எனக்கிட்ட வேலைகளைச் சில சமயம் ராஜுவால் முடிப்பது வழக்கம். அதனால் அடிக்கடி என்மேல் என ஜனங்கள் கோபித்துக் கொள்வார்கள்.

‘கடைசியாக நானும் ராஜுவும் பகிரங்கமாய் வேறே ஊர் போய் விடுவதென்று நிச்சயித்துவிட்டோம். இந்த ஏற்பாடு எப்படியோ மணியகாரனுக்குத் தெரிந்து விட்டது. அவர் சில ஆட்களைக்கொண்டு அன்று (நாங்கள் நிச்சயித்த) சாயந்திரம் ராஜு வெளியே போயிருக்கையில் சித்திரவதை செய்து, கொன்று குளத்தில் போட்டு விட்டார்கள். பொலீசார் அதைப்பற்றிக் கேஸ்எடுத்

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம்: தாதுவருஷ
ஆவணிமீ ௧௨ வியாழக்கிழமை.

## இதற்கும் அதற்கும் இடையேயுள்ள பேதம்

**யா**ழ்ப்பாணத்திலே, இப்பொழுதுள்ள பட்டின பரிபாலன சங்கத்தைத் தவிர்த்து நகர சங்க பரிபாலனத்தைக் கைக்கொள்ள வேண்டுமென்று ஒரு கட்சியாரும், நகரசங்கம் வேண்டாம் அது வரின் பெருங் கஷ்டம் நேரும் இந்தப் பட்டின பரிபாலன சங்கத்தையே வேண்டியவாறு சீர்திருத்தி அமைத்து நடத்தினற் போதும் என்று இன்னெரு கட்சியாரும் அபிப்பிராயபேதப் பட்டமையினல், இரு கட்சியாரும் தனித்தனி தத்தம் கொள்கையைத் தாபிக்கும் பொருட்டு இடங்கள் தோறும் கூட்டங்களைக் கூட்டிப் பிரசாரஞ் செய்து தீர்மானங்களை நிறைவேற்றி மேலதிகாரிகட்கு முறையே தெரிவித்து வருகின்றனர். இப்படியான இரு கட்சியாருள் நகரசங்கந்தான் வேண்டுமென்று வாதிக்கும் கட்சியார் பட்டினபரிபாலன சங்கத்தின் குறைகளையெடுத்துப் பலவாறு சொல்லி வருகிறார்களே யல்லாமல் நகரசங்கத்தால் வரக்கூடிய நன்மைகளையேனும் நகரசங்க பரிபாலனமுறை எப்படிப்பட்டதென்பதையேனும் எடுத்துக்காட்டுகின்றிலர். யாழ்ப்பாணப் பட்டினம் சனத் தொகையிற் கூடி விட்டது பட்டின பரிபாலன சங்க வரும்படி அதிகப்பட்டு விட்டது பட்டினவாசிகள் சீர்திருந்தி விட்டார்கள் இப் பட்டினத்தைப் பரிபாலித்தற்கு இப்பொழுதுள்ள பட்டின சங்கம் தகுதியற்றது என்று இவை போன்ற காரணங்களைக் கூட்டங்களிற் பிரசங்கித்தும் பத்திரிகைகளில் எழுதி வெளியிட்டும் வருகின்றார்கள். இப்படிப்பட்ட நியாயங்களும் ஏதுக்களும் வரியிறுக்கும் பட்டின வாசிகளுட் பெரும்பாலினராகிய சாமானிய சனங்களுக்கு விளங்குமோ என்பது தான் சந்தேகம். பட்டின பரிபாலன சங்கம் வேண்டா மென்பாரும் அதுதான் இன்னமும் வேணு மென்பாரும் நகர சங்கத்தின் அமைப்பையும் அதனல் விளையக் கூடிய நன்மை தீமைகளையும் இப் பட்டின வாசிகட்கு இயன்ற வரையில் எடுத்துத் தெருட்டுவதை விட்டுப் பரஸ்பரம் தம்முள் மாறுபட்டு வாதாடுவதும் பிணங்குவதும் தவறாகும்.

நகரசங்கம் கொழும்பு கண்டி காலி என்னும் பட்டினங்களில் அமைக்கப் பட்டபடி, இப் பட்டினத்திற்கும் சில மாறுதல்களுடன் இங்கே தாபிக்கப்படுமெனக் காத்திருக்க லாகும். இப்பொழுது பட்டின சங்கத்தில் இருக்கும் சங்கத் தலைவருக்கும் உபதலைவருக்கும் பதிலாக நகரசங்கத்திலே ஒரு தலைவரும் (Mayor) உப தலைவரும் (Deputy Mayor) நியமனம் பெறுவர்; இப் பட்டின சங்கத்தில் இருக்கும் உத்தியோகத்தைக் காட்டிலும்கூடியதொகையினராகிய உத்தியோகத்தினர் உயர்ந்த வேதனத்துடன் நியோகிக்கப்படுவர்; பட்டின சங்கத்தாருக்கு வேண்டிய காலங்களிற் புத்தி சொல்லும்படியும் எல்லை கடந்து இச் சங்கத்தார் கருமம் ஆற்றத் தலைப்படும்போது இவர்களைத் தடுத்தற்கும் கொழும்பிலே ஒருபிரதம சுயபரிபாலன சங்கம் இருக்கிறது; ஆனல் நகர சங்கத்தார் அச் சங்கத்திற்கு எவ்வாற்றானுங் கட்டுப்பட வேண்டியவரல்லர். இங்குள்ள பட்டினசங்க வருவாயில் பத்திலொரு பங்கு விகிதமான பணமே இப்பொழுது இச் சங்கத்தின் உத்தியோகத்தருடைய மாச வேதனமாக உதவப்படுகின்றது. எஞ்சிய பணத்தையெல்லாம் இப் பட்டின சங்கத்தார்விரும்பினல் பட்டினத்தைச் சீர்திருத்தும்விஷயத்திலே செலவிடலாகும். சுருங்கச் சொல்லுகில் நகரசங்க பரிபாலனத்தினற் காலகதியில் யாதாயினும் நன்மை வருதல் கூடுமாயினும், ஆரம்பத்தில் இப்பட்டின வாசிகட்கு அச் சங்க பரிபாலன முறை பரம சங்கடமாகவேயிருக்கு மெனலாம்; ஓலையால் வேயப் பெற்ற வீடுகள் அடைக்கப் பட்ட வேலிகள் யாழ்ப்பாணப் பட்டினத்தில் அதிகமுண்டு; இவைகளெல்லாம் நகர சங்க பரிபாலனத்திற்கு வசதியானவைகளல்ல; எரு பசளை முதலியவற்றைக் கொல்லைப் புறத்தே க்ஷேமித்து வைத்தல் முதலிய இவைகளும் நகர சங்க பரிபாலனத்தில் இடம் பெறு. இன்னும் இப்படியான பல வசதியீனங்களும் சிலவசதிகளும் பட்டின வாசிகட்கு ஏற்படுதல் கூடும். தரித்திரத்தோடு கூடிய யாழ்ப்பாணப் பட்டினவாசிகட்குப் பட்டின சங்கமே இப்போதைக்கு அமைந்ததென்றும் நகரசங்கம் காலகதியில் தாபிக்கத் தக்கது என்பதுமே இப் பட்டினவாசிகளுட் பலருடைய அபிப்பிராயம் என்பது ஒருவாறு அறியக் கிடக்கின்றது.

## எப்போதும் ஏமாற்ற முடியாது

மயிலாடுவதைப் பார்த்திருந்த வான்கோழியும் தனது பொல்லாத சிறகை விரித்தாடியதுபோல, இந்தியத் தேசிய மகாசபையின் நடவடிக்கைகளைப்பார்த்திருந்த "இலங்கைத் தேசிய மகாசபை" எனும் சிங்களச் சபையும் தனது பொல்லாத முறைகளை வெட்கமின்றிப் பிரசாரஞ் செய்யத் தலைப்பட்டிருக்கிறது. இத்தகைய பிரசாரக் கூட்ட மொன்று சென்ற சனிக்கிழமை யன்று பாணந்துறையில் நடைபெற்றது. அதன் நடவடிக்கைகளையும் அதிற் சொற்பொழிவாற்றிய ஸர். பரன் ஜெயத்திலகாவின் புரட்டு நியாயங்களையும் இற்றைப் பிரசுரத்திற் பிறிதோரிடத்துக் காண்க.

அரசாங்கசபையில், சபை முதல்வர், உள்நாட்டு மந்திரி எனும் பொறுப்பு வாய்ந்த பதவிகளை வகிக்கும் இப் பெருமகன், பள்ளிச் சிறுவரைப்போல உள்ளதை மற்றொன்றாகத் திரித்துக்கூறி ஊரவர்களை ஏமாற்றிவிட முயல்வதைப் பார்க்கும்போது எவரும் எள்ளி நகையாடுதற் கிடம் ஏற்படுகிறது. "மந்திரி சபையை நாம் வேண்டுமென்றே முன்னலோசனையின்மீதே அமைத்தோம். தற்போதிருக்கும் மந்திரிசபை சிங்களவர்களின் சூழ்ச்சியினல் ஏற்பட்ட தென்று குறைசொல்லுவோருக்கு, ஐரோப்பியரும் தமிழரும் அதற்கு ஆதரவளித்தார்களென்பதே நாம் இறுக்கும் பதிலாகும்" என ஸர். பரன் பின்புள் ஆலோசியாமற் பிதற்றுகின்றார்.

சர்வசிங்கள மந்திரிசபை ஒன்றை ஏற்படுத்துதற்காகச் சதி செய்த இவரும் இவரது கூட்டத்தவரும் மந்திரிசபை தெரியப்பட்டவுடனேயே அச்சபை தம்மால் "வேண்டுமென்றே அமைக்கப் பெற்றது" எனத் தெளிவாகக் கூறினர். ஏழு மந்திரிகளில், ஒருவர் தவிர்ந்த ஏனைய அறுவரும், ஒரு மதத்தைச் சேர்ந்தவரும் ஒரு சாதியைச் சேர்ந்தவரும் ஆவர். இவ்வுண்மையை ஸர். பரன் மறைத்தல் முடியுமோ? அங்ஙனம் முயன்றால் முழுப் பூசினிக்காயைச் சோற்றுள் மறைக்க முயன்றவாறன்றே முடியும்! ஐரோப்பியரும் தமிழரும் தமது முயற்சிக்கு ஆதரவளித்தனர் என்று அவர் கூறும்போது தாம் பேசுவ தின்னதென்று தெரியாமலே பிதற்றுகின்றனர்போலும். ஐரோப்பியரும் தமிழரும் அவரது முயற்சிக்கு ஆதரவளித்திருந்தால், அவர்கள் இக் கூட்டத்தவரது முன்னலோசனையையும் வஞ்சனையையும் அறியாமலே ஆதரவளித்திருப்பாரன்றிப் பிறிதல்ல. அவர்கள் தமக்குத்தாமே தீங்கிழைத்துக்கொள்வார்கள் என்று கூறுவது உண்மைக்கு வெகு தூரமாகும். உண்மையைத் திரித்துக் கூற ஸர். பரன் கற்றுக்கொண்ட வன்மை பெரிதும் வியக்கத்தக்க தொன்றாகும். இலங்கைத் தேசிய மகாசபை என்னும் இவரது கூட்டத்தவரைக்கொண்ட சபைக்கு இவர் ஆதரவு தேடுவது இயல்பே. அதற்காக உண்மையைத் திரித்துக் கூறின் மற்றவர்கள் வாளா இருக்க முடியாது. இச்சபையின்கொள்கை என்ன? சென்ற பொதுத் தேர்தலில இச்சபை தனது கொள்கை இன்னது என்று பொதுஜனங்களுக்குத் தெரிவித்துக் கொண்டதா? அன்றி ஏதாவது கொள்கையுண்டேல் அக் கொள்கைக்கு விரோதமில்லாமல் நடந்து கொண்டதா? இதன் அங்கத்தவர்களும் இதைக் கட்டி அழுவோரும் யார்? ஸர். பரன் பட்டப் பகற்பொழுதை இரவென்று சாதிக்க முயன்றால் அது முடியுமா? சென்ற பொதுத் தேர்தலில் நடைபெற்ற விஷயங்களிலிருந்து இச்சபை, பதவிவேட்டையையும் பட்டமுதன்மையையும் வேண்டி நின்ற சிலரது சொந்த நன்மையைக் கருதும் கூட்டம் என்பதை யன்றி வேறு எதனையும் நிரூபித்ததா? இலங்கைத் தேசிய மகாசபையாரெனத் தம்மைத்தாமே அழைத்துக்கொள்ளும் இவர் கடபனைப் பகுதியில் யாரை ஆதரித்தனர்? பலகாலமாக இச்சபைக்காகப் பெரிதும் உழைத்துவந்த திரு. ஆர். எஸ். குணவர்த்தனவுக்கு மாறாக, மேற்படி சபையை அற்பமுங் காருண்யமின்றிக் கண்டித்துவந்த திரு. டி. பி. பணபொக்கே என்பவரையன்றோ இவர்கள் ஆதரித்தனர். திரு. பணபொக்கே, ஸர். பரன் ஜெயத்திலகா, திரு. சேனநாயகா என்போரது வருணத்தைச் சேர்ந்தவர் என்ற காரணமன்றி வேறு எக் கொள்கைபற்றி இவர்கள் அவரை ஆதரித்தனரோ? அது மாத்திரமா? மாத்தறைப் பகுதித் தேர்தலை எடுத்துக் கொள்ளுவோம், இப் பகுதியில் திரு. ஜீ. கே. டப்ளியூ. பெரேரா, திரு. ஆர். ஹேவவிரத்ன என்னும் இருவர்க்குமிடையே மிக உக்கிரமான போட்டி நடைபெற்றது. திரு. பெரேரா ஒரு காலத்தில் இலங்கைத் தேசிய மகாசபையின் தலைவராக இருந்தவரன்றோ? அங்ஙனமாகவும் அவருக்கு மாறாக, திரு. ஆர். ஹேவவிரத்னவுக்காக இக் கூட்டத்தவர் பெரிதும் பாடுபட்டு உழைத்து அவரை வெற்றியடையச் செய்தமைக்குக் காரணம் யாதோ? திரு பெரேரா இவர்கள் ஜாதியைச் சேர்ந்தவர் அல்லர் என்பதுதான் நியாயமாகுமோ? இதுவேயுமன்றி, இக் கூட்டத்தார் ஒவ்வோர் நிருவாக சபையிலும் விசேஷ ஆற்றலோடும் அநுபவத்தோடும் தொண்டாற்றிவரக்கூடிய பல அங்கத்தவர்களை அவ்வந் நிருவாக சபைகளில் அங்கத்தவர்களாகச் சேரவிடாமல் ஒதுக்கிவைக்க எடுத்துக் கொண்ட முயற்சியும் பொதுஜனங்கள் அறியாததொன்றோ? உதாரணமாக நீடித்த காலமாகத் தொழிலாளருக்காக உழைத்துவரும் திரு. குணசிங்கா தொழில் நிர்வாகசபையில் அங்கத்துவம் பெற்றிலர். இதுபோன்ற செயல்கள் இன்னும் பலவாகும். இவைதாமோ "வேண்டுமென்று முன்னலோசனையின்மீது" அமைக்கப்பெற்ற மந்திரிசபையின் விளைவு? என்னே! தேசாபிமானம். என்னே ஸர். பரனின் தேசத்தொண்டு!

இத்தகைய சூழ்ச்சிகளும் வஞ்சனைகளுமா இலங்கைத் தேசிய மகாசபையின் கொள்கைகள்? இத்

# பாணந்துறை மகாஜன சபை

## மந்திரிசபையில் சிங்களவர்களே மந்திரிமாராக வந்தமைக்குக் காரணம்

### சபை முதல்வர் கூறும் சமாதானம்

## இலங்கைத் தேசிய காங்கிரஸ் கூட்டப் பிரசார வேலை

பாணந்துறையில் இலங்கைத் தேசிய காங்கிரஸ் பிரசாரக் கூட்டமொன்றில் பேசும்பொழுது மற்ற வகுப்பினரும் சிங்களவர்களை நம்பலாமென்று உணரும்படி நாங்கள் நடக்கப் போகிறோமென்று ஸர் பரன் ஜெயத்திலகா குறிப்பிட்டுப் பேசினர்.

தற்சமயமிருக்கும் மந்திரிசபை சிங்களவர்களின் சூழ்ச்சியினல் ஏற்பட்டது என்று குறை சொல்லுபவர்களுக்கு ஐரோப்பியர்களும் தமிழரும் ஆதரவாகவிருக்கிறார்க ளென்பதே போதுமான பதிலாகும். ஆனல் மந்திரிசபை அமைக்கப்பட்டது வேண்டுமென்றே முன்னலோசனையின்மீதே என்பதை அவர் திரும்பவும் வற்புறுத்தினர். அந்தக் கூட்டம் பாணந்துறை மகாஜன சபாவின் ஆதரவில் நகர மண்டபத்தில் நடைபெற்றது. இலங்கைத் தேசியக் காங்கிரஸைத் திரும்பவும் உயிர்ப்பிக்கச் செய்யப்போகும் பிரசாரங்களில் இது முதலாவதாகும்.

ஸர் பரன் ஜெயத்திலகா தவிர திரு. டி. எஸ். சேனநாயகாவும், திரு. எச். டபிள்யூ. அமரசூரியாவும் கூட்டத்தில் பேசினர்.

## ஸர். பரன் ஜெயத்திலகாவின் பிரசங்கம்

ஸர் பரன் ஜெயத்திலகா பேசியதாவது:—

இலங்கைத் தேசிய காங்கிரஸை உயிர்ப்பிக்க எடுக்கும் முயற்சிக்கு முதன்முதலாக நாங்கள் பாணந்துறைக்கு வந்தது நன்மையான சகுனமாகும். 1933-ல் இதே மண்டபத்தில் மந்திரிகளின் அரசியல் சீர்திருத்தக் குறிப்புக்கு விரோதமான பிரசாரம் இருந்தும் பெருவாரியான வாக்குகளால் நிறைவேறியது. நான் முன் மகாஜன சபையில் மந்திரிகளுக்கும் உபதலைவருக்கும் அளித்த வரவேற்பில் பேசியதிலிருந்து அங்குமிங்கும் சில பகுதிகளை எடுத்துக்கொண்டு பத்திரிகைகள் பொருத்தமற்ற கண்டனம் செய்தன.

### மந்திரிசபை அமைப்பு

7 மந்திரிகளும் காங்கிரஸைச் சேர்ந்தவர்களென்று நான் சந்தோஷமடைந்தேன். மந்திரிசபை வேண்டுமென்று முன்னலேயே திட்டம்போட்டே அமைத்தோம் என்று சொன்னேன். அதனல் என்ன தப்பிதம்? நான் இப்பொழுதும் அதைத்திருப்பிச் சொல்லுகிறேன். இதேமாதிரி 1931-லும் நடந்திருக்கலாம். ஆனல் அப்பொழுது எங்கள் கட்சிக்கு இவ்வளவு பலமில்லை அப்பொழுது நாங்கள் பிரயாசை எடுக்கவில்லை யென்று அர்த்தமில்லை. அப்பொழுது 7ல் 4 மந்திரிஸ்தானங்களைக் கைப்பற்றினேம். 1932 அக்டோபரில் அரசாங்க சபையில் டொனமூர் கமிட்டி பிரித்தாள ஏற்பாடு செய்தது. ஆனல் காங்கிரஸ் கட்சி பெருவாரியான ஸ்தானங்களை அடைந்து நிர்வாகக் கமிட்டிகளைக் கைப்பற்றியது என்று நான் பகிரங்கமாக அறிவித்திருக்கிறேன்.

### ஐரோப்பியர் ஆதரவு

நாங்கள் இரண்டு தடவை மந்திரிசபை அமைத்த பொழுதும் ஐரோப்பிய அங்கத்தவர்கள் எங்களுக்கு ஆதரவளித் திருக்கின்றனர். அதனல் தற்சமயமிருக்கும் மந்திரிசபை சிங்களவரின் சூழ்ச்சியினல் மட்டும் ஏற்பட்டதென்று சொல்வது தப்பிதம். 7 மந்திரிகளில் 5 பேர் போட்டியின்றித் தெரிந்தெடுக்கப்பட்டனர். என்னுடைய கமிட்டியில் ஒரு ஐரோப்பியரும் ஒரு தமிழரும் இருக்கின்றனர். அப்படியிருந்தும் நான் ஏகமனதாய்த் தெரிந்தெடுக்கப் பட்டேன். அதுபோலவே விவசாய மந்திரிஸ்தல ஸ்தாபன மந்திரித் தேர்தல்களிலும் நடந்தன.

திரு. கொரியா தேர்தலில் அந்தக் கமிட்டியிலிருந்து இரண்டு சிங்களவர்களும் மாறுபட்டனர். தமிழ் அங்கத்தவர்கள் திரு கொரியாவுக்கு வாக்களித்தனர். அதனலேயும் மந்திரிசபை அமைப்புக்குச் சிங்களவர் சூழ்ச்சி யென்பதற்கு இடமில்லை எனறு ஆகிறது.

### சிறுபான்மையோர் உரிமை

சிங்களவர்களின் பெரும்பான்மையினல் சிறுபான்மைச் சமூகங்களுக்கு இடைஞ்சலேற்படுமென்று வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் நமது விரோதிகள் பிரசாரம் செய்கின்றனர். அது தவறான—நியாயமற்ற அபிப்பிராயமாகும். கடந்த மந்திரிசபையில் 5 மந்திரிகள் சிங்களவர்களாக விருந்தனர். அதனல் சிறுபான்மையோர் உரிமை பாதிக்கப்பட்டதா? அது வெகு காலமாக இருந்துவரும் சிங்களவர் சரித்திரத்திற்கும் அவர்களின் நியாயமான மனப்பான்மைக்கும் விரோதமான செய்கையாகும். அரசாங்க சபைக்குள்ளாலும் வெளியிலானும் சிங்களவர்கள் மற்ற வகுப்பினருக்கும் பாதகமாக நடக்கமாட்டார்கள். இப்பொழுது 7 மந்திரிகளும் சிங்களவராக இருக்கிறோம். நாங்கள் எங்கள் அதிகாரத்தைக் கெட்டவழியில் பிரயோகம் செய்ய மாட்டோம். மற்ற வகுப்பினர் சிங்களவரை நம்பலாமென்று உணரும்படி நடந்துகொள்வோம்.

### பந்தயப் பைத்தியம்

தேசத்தில் வறுமை அதிகமாயிருக்கிறது. அதை ஒழிக்க வேண்டும். ஜனங்கள் அதிகம் சம்பாதிக்கவும் குறைவாகச் செலவழிக்கவும் பழகவேண்டும். 50 வருடங்களுக்கு முன் பெண்கள் குதிரைப் பந்தயத்திற்குப்போய்ப் பணம் கட்டிப் பந்தயம் பிடிக்கக் கலந்துகொண்டதில்லை. வருடம் முழுவதும் சம்பாதித்து மிஞ்சிய பணம் குதிரைப் பந்தயத்தில் போய்விடுகிறது. தற்கால நவநாகரிகமும் அதிகப் பணச் செலவை ஏற்படுத்துகிறது. ஜனத்தொகை அதிகரித்து விட்டது. ஆனல் தேசம் ஒரே அளவிலிருக்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# நவக்கிரியிற் கல்லெறியும் கத்திக்குத்தும்

## வழக்காளி கூறிய சாக்ஷியம்

## "எதிரி என் காதடியில்வெட்டினர்; கத்தியையும் விசிவிட்டு ஓடினர்"

யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் சென்ற 25-8-36 செவ்வாய்க்கிழமை நவக்கிரியில் வசிக்கும் (1) அரியநாயகம் (2) வல்லிபுரமாகியவர்கள் அவ்வூர் இராசரத்தினத்தைக் கத்தியால் வெட்டியும் கல்லால் எறிந்தும் காயப்படுத்தியதாகக் குற்றஞ்சாட்டிய வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்காளி சார்பாக நியாயதுரந்தரர் திரு. சாம் சபாபதியும் எதிரி சார்பாக திரு. H. R. அருயகுட்டியும் விவாதித்தனர்.

வழக்காளியாகிய இராசரத்தினம் கூறியதாவது:—

"நான் இச்சம்வம் நடந்த இடத்திலிருந்து ஒரு கூப்பிடு தூரத்துக்கப்பால் இருக்கிறேன். எனது சகோதரி ¼மைல் தூரத்தில் வசிக்கிறள். எனக்கும் வல்லிபுரத்துக்கும் மனஸ்தாபங்களுண்டு. எனது சகோதரியும் வல்லிபுரமும் ஏன் ஏச்சுப்பட்டார்கள் என்று எனக்குத் தெரியாது. வல்லிபுரத்தின் வீட்டுக்குப்பக்கத்தால் இளையதம்பி வீட்டுக்குப் போக ஓர் போது வழியுண்டு. அந்தவழியால் நான் இளையதம்பி வீட்டுக்குக் கத்தரிக்கன்றுகள் வாங்குதற்காகச் சென்றேன். அப்போது வல்லிபுரம் எனது சகோதரியையும் என்னையும் வைதார். நான் என்னை ஏன் வைகிறய் என்று கேட்டேன். அப்போது எதிரி நீயும் வந்துவிட்டாயோ, பொறுத்துக்கோள் வந்துவிடுகிறேன் என்று சொல்லிவிட்டுத் தனது வீட்டுக்கு ஓடிச்சென்று ஓர் கத்தியை எடுத்துவந்தார். நான் எனது பக்கத்தில் கிடந்த ஓர் பூவரசந் தடியை எடுத்து முறித்து வைத்திருந்தேன். எதிரி எனக்கு வேட்டக் கத்தியை ஒங்கிக்கொண்டோடி வந்தார். நான் கையிலிருந்த தடியால் அடிக்க ஓங்கினேன். எதிரி தடியைப் பிடித்துக்கொண்டு தனது கத்தியால் எனது இடது பக்கக் காதடியில் வெட்டிவிட்டுக் கத்தியையும் அவ்விடத்தில் போட்டுவிட்டுத் தனது வீட்டுக்கு ஓடினர். நான் துரத்தினேன். 2-ம் எதிரி வல்லிபுரத்தின் மனைவி அழகம்மா வந்து எனது பிற்பக்கச் சீலையில் பிடித்தாள். 1-ம் எதிரி ஓர் கல்லால் எறிந்தார். நான் அழகம்மாவின் மயிரிற் பிடித்தேன். நான் வல்லிபுரத்தின் வீட்டுக்கதவுக்குஉதைக்கவில்லை. விறாந்தையில் இருந்த பெட்டகத்தைக் கொத்தவுமில்லை. நான் விதானை வீட்டில் நிற்கும்போது மணியகாரன் எதிரியுடன் அங்குவந்தார். கதவு பலமாகத் திறக்கப்பட்டிருக்கிறதைப்பற்றி எனக்குத் தெரியாது. நான் இக்கோட்டில் பல முறைகளில் வழக்காளியாக வந்திருக்கிறேன். ஆனல் எத்தனை வழக்கில் வந்தேன் என்று என்னுற் சொல்லமுடியாது. நான் வல்லிபுரத்தின் மனைவிக்கு அடிக்கவில்லை.

இதன்பின் பொன்னுச்சாமி பேண் அரியநாயகமும் சிற்றம்பலமும் விசாரிக்கப்பட்டனர். அதன்பின் இரண்டாம் எதிரியின் கையடையாளம் எடுக்கப்பட்டு விசாரணை 8-9-36க்குத் தவணையிடப்பட்டது.

## ஸ்ரீ ராமக்கிருஷ்ண பரமஹம்சரின் நூற்றாண்டு விழா

ஸ்ரீமத் இராமக்கிருஷ்ண பரமஹம்சரின் நூற்றாண்டுப் பிறந்தநாள் விழா தாது ஆவணி மீ ௯௨ சனிக்கிழமை (29-8-36) துவக்கம் ௨௯ உ ஞாயிற்றுக்கிழமை (13-9-36) வரையும் வெள்ளவத்தை 44 ம் வீதியில் புதிதாக திறவப்பட்டிருமடத்தில் கொண்டாடப்படும். நீதியதிபதி கனம் திரு. M. T. அக்பார் அவர்கள் மேற்படி பண்டபத்தில் நடைபெறும் பலசமய மகாநாட்டில் அக்கிராசனம் வகிப்பர்.

## காயமுண்டாக்க எத்தனித்ததாக வழக்கு

### பதின்மர் எதிரிகள்

யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் சென்ற 26-8-36 புதன்கிழமை உப நீதிபதி திரு சைமன் ஞெட்ரிக்கோ முன்பாக நல்லூரைச்சேர்ந்த (1) சபாபதி சின்னதம்பி (2) கந்தையா சின்னத்தம்பி (3) கனகசபை அன்னலிங்கம் (4) ஜெகநாதன் K. பொன்னுத்துரை (6) T. பொன்னுத்துரை (7) சிவசாமி (8) முத்தையா (9) முத்துச்சாமி (10) இராசையா ஆகியவர்கள் அவ்வூர் கல்லதம்பி, கந்தையா, வேலுப்பிள்ளை ஆகியவர்களுக்குச் சட்டவிரோதமாகவும் உலகசமாதானத்துக்கு விரோதமாகவும் கூட்டங்கூடி மேற்குறித்தவர்களுக்குக் காயமுண்டாக்க எத்தனித்ததாக மூன்று குற்றச்சாட்டுகளில் சாட்டப்பட்ட வழக்குச் சார்சன் செல்லையாவால் தொடரப்பட்டது.

கந்தையா — சின்னத்தம்பியும் கனகசபை—அன்னலிங்கமும் கோட்டில் ஆஜராயினர். மற்றையவர்கள 10—9—36 கோட்டுக்கு வரக்கூடியதாக சம்மன்ஸ் அனுப்பப்பட்டிருக்கிறது.

## இராக் மந்திரி விஜயம்

எருசலேம் ஆக. 21—

அரசாங்க மாளிகைக்குப் பக்கத்தில் அவருடைய வாசஸ்தலத்தில் ஹெப்ரூ சர்வகலாசாலையைச்சேர்ந்த ஆங்கில யூதர் மிஸ்டர் லூயிஸ் பில்லின் இன்று சுட்டுக் கொல்லப்பட்டார்.

படுக்கையறையில் மிஸ்டர் பில்லின் படித்துக் கொண்டிருந்தார். கொலையாளிகள் வீட்டுப் பக்கம் பதுங்கிச் சென்று ஜன்னல் கதவு வழியாகச் சுட்டிருக்கின்றனர். பிரேதம் இன்று காலை பார்க்கப்பட்டது.

இராக்கின் அக்கிய காட்டு பக்கிரி ஜெனரல் நூரிப் பாட்சா இங்கு வந்திருக்கிறார். அவர் ஏற்கனவே பாலஸ்தீன அராபியத் தலைவர்களைச் சந்தித்திருக்கிறார். அதனால் பாலஸ்தீன விஷயமாக ஓர் முடிவேற்படுத்த அராபிய அரசர்கள் தலையிடுவார்கள் என்ற ஓர் செய்தி பரவியிருக்கிறது.

## அறிவித்தல்

### யாழ்ப்பாணம் டிக்குவேவ்ட் கோட்டில்

4315 / A இலக்க வழக்கின் சட்டப்பேரில்

1. புன்னன் வேலன்
2. சின்னட்டி பொன்னன்

ஆகிய இருவரும் தங்கள் சார்பாகவும் சங்கானை கிழக்கிலுள்ள பள்ள சாதியார் சார்பாகவும் வாதிகள்.

முதலியார் சரவணமுத்து வட்டுக்கோட்டை கிழக்கு பிரதிவாதி.

மேற்குறித்த வாதிகள், தங்கள் சார்பாகவும், சங்கானை கிழக்கிலுள்ள பள் சாதியாரின் சார்பாகவும், வட்டுக்கோட்டை கிழக்கிலுள்ள முத்துமாரியம்மன் கோவிலில் நடைபெறும் வருடாந்த திருவிழாவின்போது 9-ம் திருவிழாவை நடத்தவும் கோயிலை வழிபாடு செய்யவும் தமக்குரிய உரிமையைப் பெறுவதற்கும் இவ்வழக்கில் ஏற்பட்ட செலவாக 150 ரூபாவையும் தமக்கேற்பட்ட நஷ்டஈடாக 150 ரூபாவையும் பெறுவதற்குமாக வழக்குத் தொடருதற்கு அனுமதியளிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஒப்பம் C. குமாரசாமி,
23-8-36.

(O. 47. 27-8-36.)

## நூல்களைப்பற்றிய குறிப்பு

கலைச்சொற்கள்:

இக்காலத்திலே ஆங்கில மொழிப் பயிற்சியும் பேச்சும் எழுத்தும் மொழிபெயர்த்தலும் ஆவசியகமானவையென்பது எவரும் அறிந்த உண்மையாகும். அநேக அரிய விஷயங்களைக் கொண்ட ஆங்கில நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்துப் பயிலுதற்கும் பயன்படுத்தற்கும்பெருந் இடையூறு ஆங்கிலமொழியிலுள்ள பல சொற்களின் பொருளை விளக்குதற்கான சம தமிழ்ச் சொற்கள் இல்லாமையேயாகும். இக் குறைவு காரணமாகப் போலும் தென்னிந்தியாவில் இக்காலம் எழுதப்படும் கவனமான நூல்களில் அக்கட்டு ஆசிரியர்கள் ஆங்கிலச் சொற்களை அப்படியே வேண்டிய இடங்களில் தமிழ்ட்சரத்தில் எழுதிச் சேர்த்துவருகின்றனர். இப்பெருங் குறையை நீக்க முயற்சிகொண்ட சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கத்தார் பல கலைகட்குரிய ஆங்கிலச் சொற்களுக்கு அவ்வத் துறையில் திறமையுடைய ஆசிரியர்களைத் தேடிக் கண்டு ஆற்றற்குச் சமானமான பொருள்கொண்ட தமிழ்ச்சொற்களை ஆக்குவித்து அகராதி முறையில் வெளியிட்டுள்ளனர். இக்கலைச் சொல்நூலில் 1. பூதநூல் (Physics) 2 இயைபு நூல் (Chemistry) 3 கணிதம் (Mathematics) 4. இயற்கைநூல் (Natural Science) 5 உடலியலும் நல்வாழ்வும் (Physiology—Hygiene) 6 தரைநூல் (Geography) முதலிய கலைகட்காய சம பதங்கள் அடங்கியுள்ளன. இவை திருநெல்வேலியில், இசைத்தமிழ்ச் செல்வர் திரு தி. இலட்சுமணபிள்ளை (B. A.) என்பவரின் தலைமையில் நடைபெற்ற அறிவுநூற் புலவர்மகாநாட்டில் முடிவு செய்தபடி திருப்பனந்தாள், காசி மடத்தின தலைவர் காசிவாசி மறைத்திரு சாமிநாதசுவாமிகளவர்கள் உதவிய பொருள் கொண்டு சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தாரால் அச்சிடுவிக்கப் பெற்றன. இந்நூல் தமிழ் ஆங்கில ஆசிரியர்கள் மாணக்கர் ஒவ்வொருவர் கரத்திலும் இருக்க வேண்டியதாகும். இச் சங்கத்தாரின் முயற்சியைப் பெரிதும் பாராட்டுகின்றேம். பிரதியொன்றன் விலை அணு 8. (50 சதம்) பிரதிகள் சென்னைமாகாணத் தமிழ்ச் சங்க அமைச்சர், திருநெல்வேலி என்ற விலாசத்திற் பெறற்பாலன.

## சைவப்பிரகாசிகை

### நான்காம் புத்தகம்

இந்நூல், அச்சுவேலி பிரமஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்களவர்களால் தாம் முன்னர் எழுதி வெளியிட்ட சைவப்பிரகாசிகை முதல் மூன்று புத்தகங்கட்கும் இயைய ௩௨ அரிய விஷயங்களைக்கொண்ட பாடங்களையுடையதாய்த் தொகுக்கப்பட்டிருக்கின்றது; மேலும் இப்புத்தகத்திற்கு திரு. வை. துரைசுவாமி முதலிய தமிழ்ச் சனத்தலைவர் சிலரும் வித்தியாதரிசிகள் சிலரும் நல்லபிப்பிராயம் உதவியிருக்கின்றனர். குறித்த குருக்களவர்களின் தமிழறிவு வசனநடைத்திறனும் அவர் எழுதிய முக்கிய நூல்கள் பல வாயிலாகத் தமிழகத்தார் அறியக்கிடத்தலினால் யாம் இங்கு யாதும் கூறுதல் மிகையெனமுடியும். பிரதிகள் உயர்ந்த கடிதத்தில் தெளிவான அட்சரத்தில் அச்சிட்டுக் கட்டப்பெற்றுள்ளன. சைவப்பிரகாசிகை முதல் மூன்று புத்தகங்களையும் உபயோகித்து வருதல் போல, சைவப்பள்ளிக்கூடம் கல்லூரிகளின் ஆசிரியர்கள் இந்நான்காம் புத்தகத்தையும் தத்தம் கலாசாலைகளிற் சமய பாடமாகவும் தமிழ்ப்பாடமாகவும் பயிற்றி வருதலே முறையாகும். பிரதியொன்றன் விலை சதம் 30. (அணு 5) பெறவிரும்புவோர் அச்சுவேலி பிரமஸ்ரீ ச. கு. வைத்தியேசுவரசர்மாவிடத்திலும் வண்ணார்பண்ணை ஸ்ரீ சண்முகநாதன் புத்தகசாலை, சுன்னுகம் தனலக்குமி புத்தகசாலை முதலிய பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். எமக்கு அனுப்பிய இரு பிரதிகளின் பொருட்டு அவற்றை அனுப்பியவர்கட்கு நன்றி கூறுகின்றேம்.

## பாணந்துறை மகாஜனசபை

(4-ம் பக்கத் தொடர்.)

கிறது. சிலர் நன்றாக வாழ்கின்றனர். பலர் வறுமையால் வாடுகின்றனர்.

அந்நிய நாட்டு வியாபாரிகள் குறைந்த செலவில் வாழ்க்கை நடத்துவதால் மிச்சப்படுத்துகின்றனர். இலங்கை வியாபாரிகள் வரவுக்கு மிஞ்சிய செலவு செய்வதால் கெட்டுக்கொந்து போகின்றனர். சமூகத்தில் பல வித்தியாசங்களிருக்கின்றன அவை ஒழிய வேண்டும். தேசத்தின் அபிவிருத்திக்காக ஒற்றுமை ஏற்படவேண்டும்.

### திரு. அமரசூரியா

காங்கிரஸ் தலைவர் திரு. அமரசூரியா, காங்கிரஸ் 1915-லிருந்தே ஏற்பட்ட ஸ்தாபனம் என்றும் அதற்கு 100க்கு மேற்பட்ட கிளைகளிருப்பதாகவும் அதில் எல்லோரும் சேர்ந்து அதைப் பலப்படுத்த வேண்டுமென்றும், சிலர் வேறு ஸ்தாபனங்கள் ஏற்படுத்தவோ பிரிந்துபோகவோ நினைப்பது கூடாதென்றும் குறிப்பிட்டுப் பேசினர்.

### விவசாய மந்திரி

திரு. டி. எஸ். சேனநாயகா பாணந்துறைத் தேசிய இயக்கங்களில் முன்னணியில் நிற்கிறது. நமக்கு அரசியல் அபிவிருத்தி மட்டும் போதாது. தேசத்தில் அதிக ஆகாரப் பொருட்கள் தயாராக வேண்டும். கைத்தொழில்களும் ஜாக்கிரதையாக அபிவிருத்தி ஆக வேண்டும். ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்கும் 40 லட்ச ரூபாய் வித்தியாசமிருக்கிறது. அது ஒழிய வேண்டும். தீவின் ஜனத்தொகை வருடத்திற்கு லட்சம் பேர் வீதம் அதிகரித்திருக்கிறது. ஆனல் வருமானம் அதுபோல் அதிகரிக்கவில்லை. ஜனங்களின் நன்மைக்காக நான் பலவித திட்டங்களை மனதில் கொண்டிருக்கிறேன். இனிமேல் பேசக்கூடிய சந்தர்ப்பங்களில் அவைகளைப்பற்றிச் சொல்லுகின்றேன்.

## காப்பைக் கழற்றியதாக வழக்கு

யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் உபநீதிபதி திரு. சைமன் ஞெட்ரிக்கோ முன்பாக வண்ணார்பண்ணையில் வசிக்கும் வண்ணார வகுப்பைச் சேர்ந்த கனகர்—சின்னத்துரையென்னும் 7—வயதுச் சிறுவன் சென்ற 21-8-36 காலை 8-மணியளவில் வீட்டிலிருந்து கில்னர்கொலிஜ்ஜூக் கருகாமையி லிருக்கும் தமிழ்ப் பாடசாலைக்குப் போகும்போது அவ்வூர் (வண்ணார்பண்ணை) அஞ்சனத்தாளில் வசிக்கும் வல்லிபுரம் என்பவனும் இன்னுமொருவனுமாகச் சயிக்கிளில் வந்து காப்பைக் கழற்றிச் சென்றதாகப் பொலிஸ் சார்சன் செல்லையா ஓர் வழக்குத் தொடர்ந்தார்.

நீதிபதி எதிரிகட்கு வாரண்டுக்கு உத்தரவு செய்து வழக்கை 9-9-36க்குத் தவணையிட்டார்.

## முழங்காலை முறித்ததாக வழக்கு.

### இன்ஃபவு நாயன்மார்கட்டு வைத்தியசாலையில இறந்தார்

சென்ற செவ்வாய்க் கிழமை இராமு சண்முகம் என்பவர் நீராவியடியில் வசிக்கும் நாகமுத்து சுப்பிரமணியம் என்பவரை அடித்து முழங்காலை முறித்ததாகச் சென்ற பிரசுரத்தில் வெளிவந்த செய்தியின்பேரில் காயங்காரன் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியிலிருந்து நாயன்மார்கட்டு வைத்தியசாலைக்குக் கொண்டுபோகப்பட்டு 26-8-36 இரவு 2 மணியளவில் இறந்துபட்டாரென அறிகிறேம். தகவல் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டது.

## அதிகபாரமேற்றிய லொறி

### எதிரிக்கு 50ரூபா அபராதம்.

சென்ற 25-8-36 செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் உதவிநீதிபதி திரு. C. P. De சில்வா முன்னிலையில் விசாரிக்கப்பட்ட X 5819 இலக்கமிடப்பட்ட லொறி 4048 இருத்தல் வரையில் நிறையுள்ள சினிமூட்டைகளை சி. கே ஐயப்பா ஏற்றிச்சென்றதாகக் குற்றஞ் சாட்டப்பட்ட (மிதமிஞ்சிய பாரம்) வழக்கில் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டான். நீதிபதி எதிரிக்கு 50ரூபா அபராதம் விதித்தார். இவ்வபராதம் கட்டுதற்கு இரண்டு கிழமை தவணை கொடுக்கப்பட்டது.

### காலநிலை

சில வாரங்களாக மழை பெய்யவில்லை; ஆனல் மழைக்கோலம் இடையிடையே காணப்படுகின்றது; வயல்கள் பெரும்பான்மையும் பண்படுத்தப்பட்டுள்ளன; கமக்காரர் சில இடங்களில் நாளுக்கு விதைபிடத் தொடங்கியிருக்கின்றனர்.

### பாலர் பகுதி.

இடமின்மையால் இம்முறை பாலர்பகுதி வெளியாகவில்லை. அடுத்த வியாழக்கிழமை வழக்கம் போல வெளியாகும்.

## நீச்சு நிபுணர்

### சென்னையில் காட்சி

சென்னை, ஆக 24

அகில இந்திய நீச்சு நிபுணரான ஸ்ரீமான் கே. ஆர். என். சுவாமி நேற்று சென்னை சாரணர் தலைமைக் காரியாலயத்திலுள்ள ஹட்டன் குளத்தில் பல அபூர்வமான நீச்சு வித்தைகளைக் காண்பித்தார். பல நகரங்களிலும் சென்று அவர் கீர்த்தி ஸ்தாபித்திருக்கும் வரலாற்றை ஸ்ரீமான் கே சஞ்சீவி காமத் எடுத்துக் கூறினர். பிறகு ஜஸ்டிஸ் கே. பி. லக்ஷ்மணராவ் காட்சியை ஆரம்பித்து வைக்கையில் நீச்சு உடலுக்குச் சௌகரியம் செய்கிறதென்பதைத் தாம் அனுபவத்தில் அறிந்திருப்பதாகவும், ஸ்ரீமான் கே. ஆர். என். சுவாமி மென்மேலும் கீர்த்திபெற்று விளங்க வேண்டுமென்று தாம் பிரார்த்திப்பதாகவும் கூறினர்

பிறகு ஸ்ரீமான் சுவாமி பத்துப் பதினொரு நீச்சு வித்தைகளைக் காண்பித்தார் கை கால்களைக் கட்டிக்கொண்டு நீச்சல், மார் நீச்சல், யோகாசனம் உயிர்களைக் காப்பாற்றல், மிதத்தல் ஆகியவை அவற்றிற் சில நேற்றுக் காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை ஒரு மணி விட்டு ஒரு மணி நீச்சுவகைகளையவர் பிரதர்சித்தர் —சு மி.

## மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலைப் பெற்றோர் தினக் கொண்டாட்டம்

சென்ற 23-8-36ல் மூளாய் சைவப்பிரகாசவித்தியாசாலைப் பெற்ரோர் தினக் கொண்டாட்டம் நடந்தது அரசாங்கசபைத் தலைவர் கௌரவ ஸ்ரீமான் வை. துரைசுவாமி அவர்கள் தலைமை வகித்தனர். வடபகுதித் தலைமைத் தமிழ் வித்தியாதரிசி ஸ்ரீமான் மு. தமபிப்பிள்ளையும், வித்தியாதரிசி ஸ்ரீமான் A சரவணமுத்துவும் சமூகமளித்துச் சபையைச் சிறப்பித்தனர் டை வித்தியாசாலைத் தலைமை ஆசிரியா பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள் பாடிய வரவேற்புச் செய்யுள்கள் படிக்கப்பட்டன. தலைமையாசிரியர் சென்ற வருட அறிக்கையை வாசித்தார். சிரேஷ்ட கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரங்கள், சமயபாடப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கட்குரிய பத்திரங்கள், பிற பத்திரங்கள் தலைவரால் கொடுக்கப்பட்டன. மாணவர்களின் அப்பியாசங்களின் பின் சில பெரியோர்கள் குறிப்புரை கூறினர். தலைவர் முடிவுரையின் பின்னர் தேவாரத்துடன் ஆரம்பமான கூட்டம் தேவாரத்துடன் இனிது நிறைவேறியது.

## ஆவரங்காற் கல்லெறி வழக்கு

### முதலாம் எதிரிக்கு 6 வாரம்

சென்ற 25-8.36 செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் ஆவரங்காலில் வசிக்கும் முருகன் இளையவன் என்பவனை அவ்வூர் (1) பூதன் (2) சடையன் (3) முருகன் ஆகிய மூவருள் 1ம் எதிரி கலலால் குத்திக் காயப்படுத்தியதாகவும் மற்றைய இருவரும் உதவி புரிந்ததாகவும் குற்றஞ்சாட்டிய வழக்கு விசாரிக்கப்பட்டு 1ம் எதிரியைக் குற்றவாளியெனக்கண்டு ஆறுவாரக்காவல தண்டனை விதிக்கப்பட்டது. மற்ற இருவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

## பெண்ஜென்மம் பொல்லாது.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

தார்கள். இரண்டொருவர்க்குள் அவனுக்குக் காக்கா வலிப்பு என்று தீர்ப்புச் செய்து கேஸ் ஒன்றுமில்லாமல் போய்விட்டது.

பிறகு என்னை என் தாய், தந்தை பலதரம் மணியகாரர் வீட்டிற்கு அனுப்பினர்கள் நான் மறுத்தேன் மூன்று மாதம் வரையில் தொந்திரவு செய்துகடைசியாக என்னைக்கெட்டுப் போனவள் என்று அவமானப்படுத்தி, விட்டைவிட்டுத் துரத்திவிட்டார்கள். நான் வீடு விட்டுப் புறப்படும் போது ஒரு பட்டுப்புடவையும், ஒரு தங்கச் சங்கிலியும் தான் என்னிடம் இருந்தது. அந்தச் சங்கிலியை விற்றுச் சாப்பிட்டு வந்தேன். யாரும் எனக்கு வீடு கொடுக்க மறுத்து விட்டனர். ஆனால் மணியகாரர் மாத்திரம் நான்இணங்கினால் எனக்கு எல்லாவித சுகபோகங்களும் கொடுப்பதாகச்சொல்லியனுப்பினர்.நான் ஒப்பவில்லை. நான் இவ்வளவு காலும் பக்கத்துத் தோப்பில் பகலைக் கழிப்பதும், இரவில், எங்கள் வீட்டு எதிரிலுள்ள கோவில் மண்டபத்தில் படுத்துக்கொள்வதுமாகக் கழித்தேன நேற்றிரவு வழக்கபோல் கோவில் மண்டபத்திற்கு வரும்போது மணியகாரர் என்னை அப்படியே தூக்கிக்கொண்டுபோய் அவர் இஷ்டத்தைப் பூர்த்தி செய்துகொண்டார். அதன் பிறகுஎனக்கு வாழஇஷ்டமில்லை. அது முதல் ஜலபானமும் செய்யவில்லை.

"இன்று மத்தியானம் என் மனம் பெரும் சங்கடத்திலிருந்தது கூட்டம் என்று சாம்பான் பறையடித்தான். அப்போதுதான் என் முடிவை நிச்சயித்தேன். என் சங்கிலி விற்ற பணத்தில் ஒரு அணா தான் பாக்கி அருந்தது. காலணாவுக்குப் பூ வாங்கினேன். காலணாவுக்கு வெற்றிலை பாக்கு வாங்கினேன. என மனதார அலங்காரம் செய்துகொண்டேன். என்னைப் படைப்பித்த தந்தையிடம் போக ஒய்யாரமாகவும் ஆனந்தமாகவும் கிளம்பினேன். பல பேர் பல மாதிரிச் சொன்னார்கள். எல்லாம் என் காதில் விழுந்தது எனக்கென்ன பயம்! எனக்கென்ன வெட்கம்? நான் காத்து வந்த சொத்தை மணியகாரன் பாழ்படுத்தி விட்டான். என் தேகம் இனிக் குட்டிச்சுவர்தானே? ஆதலால் கூட்டத்துக்குப் புறப்பட்டேன். இராத்திரி அவனுக்கு நான் என்ன செய்யப் போகிறேன் என்று ஒரு கடிதம் எழுதிக்கொடுத்தனுப்பினேன். பிறகு ரயில் வரும் வரையில் காத்திருந்தேன். ரயில் கிட்ட வரும்போது ரயில் லைனில் படுத்துக்கொண்டு கண்ணை மூடிக்கொண்டேன். ஒவ்வொரு மூச்சும் இதுதான் கடைசி என்று எண்ணிக் கொண்டிருக்கும்போது ரயில் பக்கத்தில் வந்து நின்று விட்டது. இந்த யமகிங்கரர்கள் (போலிசார்) என்னைப் பிடித்து இங்கே சந்நிதியில் நிறுத்தி வைத்து விட்டார்கள். பரவாயில்லை. இனிமேல் நான் பேசவும் போவதில்லை. ஜலபானமும் செய்யப்போவதில்லை. நீங்கள் என்ன செய்தபோதிலும் சரியே" என்று சொல்லி முடித்தாள்.

மணியகாரனை மாஜிஸ்டிரேட் விசாரித்துக்கொண்டிருக்கையில் கேட்டில் ஒரு பொலீஸ்காரனை "அடி பாவி!" என்றான். போலீஸ்காரனுடைய ஈட்டியைச் சட்டென்று பிடுங்கி மார்பில் குத்திக் கொன்றுவிட்டாள் அவ்வளவுதான அன்றையக் கோர்ட்டுக் கலைந்தது.

பிறகு மூன்றும்நாள் மணியகாரர் விடுதலையானார். அவமு சித்த ஸ்வாதீனமில்லாதவளெனக் கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டனர்

—லோகோபகாரி

## வட சைனாவில் ஜப்பானின் நோக்கம்

### பல மாகாணங்களைக் கைப்பற்றத் திட்டம்

டின்ஸ்டீன் ஆகஸ்ட், 18௳ குவாங்கி மீது மார்ஷல் ஷேயாங்கை ஷேய்க் படை எடுப்பதாயிருந்தால் வட சைனாவில் ஜப்பானியப் படை இன்னும் சில பகுதிகளை நாங்கிங்கின் ஆதிக்கத்திலிருந்து நீக்கமுற்படும். கிழக்குச் சாஹர் மாகாணத்தில் மஞ்சுகோவுக்குச் சாதகமான ஓர் அரசாங்கம் இருக்கிறது. அங்கு ஜப்பான் ஆதிக்கம் ஓங்கியிருக்கிறது. இப்பொழுது சுயியான் மாகாணத்தைக் கைப்பற்ற முயற்சி நடக்கிறது. கடைசியாக ஷான்ஸி மாகாணத்தைப் பிடிக்கவேண்டுமென்று ஜப்பான் நினைத்திருக்கிறது. சாஹருக்கு சைனா உதவிப் படை அனுப்புவதை பீப்பிங்கல்கன் பகுதியில் நிலைபெற்றிருக்கும் ஜப்பானியப் படை தடுக்கிறது. சாஹர் கவர்னரும் அவர் ராணுவத் தலைவர்களும் ஜப்பானியரை எதிர்ப்பதாக முடிவு செய்திருக்கின்றனர்.

## அடுத்த காங்கிரஸ் அக்கிராசனர்?

ஸ்ரீயுத ராஜகோபாலாச்சாரியார் தனது பதவிகளை ராஜிநாமாச் செய்துவிட்டபோதிலும் காலணாக் காங்கிரஸ் அங்கத்தினராக இருப்பார். புதிய காங்கிரஸ் சட்டதிட்டங்களின்படி ஒரு சாதாரண காங்கிரஸ் அங்கத்தினர் காங்கிரஸ் அக்கிராசனராகத் தேர்ந்தெடுக்கப்படலாமாதலால் அடுத்த காங்கிரஸ் மகாசபைக்கு ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாரையே ஏகமனதாக அக்கிராசனராகத் தேர்ந்தெடுத்தால் மீண்டும் அவரைத் தலைவராகப் பெறுவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்குமென்று பம்பாய் அரசியல்வாதிகள் நம்புகிறார்கள். தேர்தல் நவம்பரில் நடைபெறும்.

## ஸ்ரீமான் இராஜ கோபாலாச்சாரியார்காங்கிரஸ்காரராகவே இருந்து வருவார்

"நான் காங்கிரஸ் காரனாகவிருந்து வருவேன். ஆனால் காங்கிரஸ் விவகாரங்களில் மாத்திரம் கலந்து கொள்ள மாட்டேன்" என்று ஸ்ரீமான் ஸி ராஜகோபாலாச்சாரியார் அஸோஸியேட்டட் பிரஸ் பிரதிநிதியிடம் அறிவித்தார்.

## கிணற்றுக்குள் பிரசவம்

வடக்குகரோலினால், சான்போர்டு என்ற இடத்தில், ஸ்ரீமதி ஆல்டன் ஜூபர்பான என்ற ஒரு பெண் கிணற்றில் விழுந்து விட்டாள் அவளைக் கிணற்றிலிருந்து எடுப்பதற்குள்ளாக அவளுக்குக் குழந்தை பிறந்து விட்டது, தாயும் குழந்தையும் சௌக்கியமாக இருக்கின்றார்கள்.

## பத்திரிகை விற்போன் மீது பலவந்தம்

### காடையர் செயல்

வீரகேசரி, ஆனந்தவிகடன் முதலிய பத்திரிகைகளை விற்றுக்கொண்டிருந்த காளியப்பன் என்னும் 16 வயதுச் சிறுவனை இம்மாதம் 24 ந் திகதி திங்கட்கிழமை இரவு $8\frac{1}{2}$ மணியளவில் சில காடையர்கள் வைத்தீஸ்வர வித்தியாலயத்திற்கும் வெள்ளாக்கெருச் சந்திக்குமிடையில் மறித்து அடித்துப் பத்திரிகைகளையும் பறித்துச் சென்றதாகத் தெரிகிறது. குறித்த சிறுவன் இப்போது ஆஸ்பத்திரியில் இருந்து வருவதாகவும் பொலிஸார் இது சம்பந்தமாகப் புலன் விசாரித்து வருவதாகவுக் தெரிகிறது.

## பாலஸ்தீனக் கலகம்

### பல அராபியர்கள் மரணம்

ஜெருசலேம் ஆக. 22—

இராணுவம் கடற்கரைப் பிரதேசங்களில் தீவிரமாக வேலை செய்கிறது, நேற்று 10 அராபியர்கள் கொலைப்பட்டனர்; ஹெப்ரா பக்கங்கள் நாள் முழுவதும் நடந்த போரில் 32 அராபியா மரணமடைந்தனர்.

# தற்கொலை செய்துகொண்ட 18வயதுத் தையல்

## புஷ்பவதி ஆகமாட்டாள் என்றமையால் மனம் புண்பட்ட சூடாமணி

### சிற்றன்னையின் சாக்ஷியம்

சென்னை, ஆகஸ்டு 7

புதன்கிழமையன்று இரவு $1\frac{1}{2}$ மணியிருக்கும் ஏதோ சத்தம் கேட்ட ஸ்ரீமதி கோமளம்மாள் விழித்துக் கொண்டாள். சர்வோத்தமனை எழுப்பி என்ன 'சத்தம் என்று பார்க்கச் சொன்னாள்.

"சூடாமணியைக் காணோமே" என்றார் சர்வோத்தமன். சமையலறையில் விளக்கொன்று எரிவது போல் காணப்பட்டது. சர்வோத்தமன் சமையலறைக் கதவைத்திறக்க முயன்றார். கதவு உள்பக்கம் தாளிடப்பட்டிருந்தது! பலருடைய உதவியைக்கொண்டு கதவை உடைத்துத் திறந்து பார்க்கையில் உள்ளே முழுதும் ஒரே புகை; மண்ணெண்ணெய் நாற்றம்! இவைகளினிடையே 18 வயதுடைய யுவதி பிணமாகக் கிடந்தாள். அவள்தான சூடாமணி!

இந்த யுவதி உயிர் துறந்த பரிதாபகரமான சம்பவம நேறறு நடந்த பிரேத விசாரணையில் சொல்லப்பட்டது. ஸ்ரீமதி சூடாமணிக்கு வயது 18. இவள் இன்னும் புஷ்பவதியாகவில்லை.

மன்னடி, இராமசாமித் தெருவில் உள்ள 36-வது வீட்டில் இப்பெண் அவளுடைய பெறறோர்களுடன் வசித்துவந்தாள்.

டக்டர் இம் மங்கையைப் பரிசோதித்துப் புஷ்பவதியாகமாட்டாள் என்று கூறிவிட்டனர்.

இவ்விஷயம் ஸ்ரீமதி சூடாமணியைச் சிந்தனையில் ஆழ்த்திய ௪ம். இது முடிவில் தற்கொலையில் முடிந்தது. மேலெல்லாம் மண்ணெண்ணெயை ஊற்றிக்கொண்டு தீ வைத்துக்கொண்டு மாண்டாளாம்.

ஸ்ரீமதி சூடாமணியின் பிரேத விசாரணை நேறறு நடைபெற்றது. இப்பெண்ணின் மாற்றுத்தாய், ஒன்றுவிட்ட சகோதரர், இவர்களுடன் குடியிருப்பவர்கள் ஆகியோர்கள் விசாரிக்கப்பட்டனர்.

இப்பெண்ணின் மாற்றுத்தாயான ஸ்ரீமதி கோமளம்மாள் சாட்சியம் கூறியதாவது:—

"நான், சூடாமணியின் தகப்பனின் ஐந்தாவது மனைவி. மற்ற நாலவரும காலமாகிவிட்டனர். என் கணவன் மெயில் சார்ட்டர் உத்தியோகத்திலிருக்கிறார். உத்தியோக நிமித்தம அவர 5-ந் தேதி இரவு 7 மணிக்குப் புறப்பட்டுச் சென்றார். சூடாமணி என் கணவரின் இரண்டாவது மனைவிக்குப் பிறந்த பெண். இவளது முதல் மனைவிக்குப் பிறந்த பிள்ளையின் பெயா சர்வோத்தமன். இவருக்குச் சுமார் 20 வயதிருக்கலாம். மூன்றுவது மனைவிக்குக் குழந்தைகள் பிறக்கவில்லை. நாலாவது மனைவிக்கு ஒரு பெண்குழந்தை பிறந்தது, இப்பொழு 7 வயது ஆகிறது. எனக்கு 15 மாதக் குழந்தை யொன்று இருக்கிறது.

சூடாமணிக்கு 18 வயதாகிறது. டக்டர்கள் இவளைப் பரிசோதித்துப் பார்த்து இவள் புஷ்பவதியாக மாட்டாள் என்று கூறிவிட்டனர். இவ்விஷயமாகச் சூடாமணி எப்பொழுதும் நினைத்துக்கொண்டு கலங்கினாள்.

5-ம் தேதி புதன்கிழமை இரவு வழக்கப்போல நாங்கள் எல்லோரும் படுக்கைக்குச் சென்றோம். நானும் என் குழந்தையும் ஒரு அறையில் படுத்துக்கொண்டோம். சூடாமணியும், மற்றக் குழந்தைகளும் கூடத்தில் படுத்துக்கொண்டனர்.

என்னுடைய அறைக்குப் பக்கத்தில்இரவுஏறக்குறைய 1அல்லது 1-30 மணிக்கு ஏதோ சத்தம் கேட்டது. மண்டபத்தில் உறங்கிக்கொண்டிருந்த சர்வோத்தமனை எழுப்பி, என்ன சத்தம் என்று பார்க்கச் சொன்னேன். அவர் எழுந்து பார்த்துச் 'சூடாமணியைக் காணோம்' என்றார். நான் வெளியே வந்து பார்த்தேன். சமையலறையில் வெளிச்சம் தெரிந்தது. அது உள்பக்கம் தாளிடப்பட்டிருந்தது.

எங்கள் வீட்டில் முன்பக்கத்தில் குடியிருக்கும் கன்னியப்ப நாயுடு எழுந்துவந்து, சமையலறைக்கதவை உடைத்துத் திறந்தார்.

சூடாமணிகீழே கிடந்தாள். அவள் தேகமெல்லாம் தீப் புண்கள் இருந்தன. அறையில் மண்ணெண்ணெய் வாடை டின் இருந்தது.

சூடாமணி அணிந்திருந்த நகைகளெல்லாம இந்த அறையில் உள்ள அலமாரியில் அப்படியே இருந்தன

பிறகு உடனே பொலிசாருக்கு தகவல் அனுப்பினேன்' என்றார்.

மற்றச் சாட்சிகளும், இவரது சாட்சியத்தைத் தழுவியே சாட்சியம் கொடுத்தனர்.

மேற்படி பெண், தற்கொலை செய்துகொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடன் தீ வைத்துக்கொண்டதினால் ஏற்பட்ட புண்களால மரணம் சேர்ந்ததென்று பஞ்சாயத்தினர் தீர்ப்புக்கூறினர்.


N.வைத்திலிங்கம் & கம்பெனி

பெரியகடைத்தெரு,யாழ்ப்பாணம்.

கட்டிடங்களுக்குவேண்டிய முதல்தரமானசாமான்கள்.
ஜெர்மனி, ஜப்பான், டச்சு
முதலியவிடங்களில்செய்யப்பட்ட உத்தரவாதமுள்ள
சீமெந்துவகைகள், இரும்புச் சாமான்கள்
வர்ணங்கள், வார்ணிஷ், கொழுக்கி ஓடுகள்
இன்னும் கட்டிடத்திற்குரிய சகல சாமான்களும்
எப்பொழுதும் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.
கட்டிட வேலைகளைப்பற்றி எங்களிடம் யோசித்தால்
சகாயமும் சௌகரியமும் கிடைக்கும்.

HEAD OFFICE:
38, 3rd Cross Street,
Colombo.
Telephone No 30.
(Y. 47. 8-2-36—7-2-37)


## வைத்தியப்பகுதி

### சுகம்

முத்து வைத்தியசாலை
சுன்னாகம்
யாழ்ப்பாணம்.

சரீரசுகமின்றி இன்பம் அநுபவிக்க எவர்க்கும் முடியாது. அதைப் போல் பொருளின்றிச் செல்வம் அனுபவிக்க முடியாது. சுகதேகமுடையவர்கள் சீவியத்தில் இன்பம் அடைகிறார்கள். சுகம் அற்றவர்கள் சீவியகாலம்முழுதும் துன்பமே அநுபவிக்கிறார்கள். சுகத்தை இழந்தவர்களோ நோய்களையும், சுகத்தை இழந்தோமே என்ற துன்பத்தையும், சகிக்க முடியாதவர்களா யிருக்கின்றார்கள்.

சுகம் உள்ளவர்களைச் சுகமாக இருக்கும்படியாகவும், சுகம் அற்றவர்களைச்சுகம் அநுபவிக்கும்படியாகவும், சுகம் இழந்தவர்களைத் திரும்பவும் சுகத்தை அடையும்படியுமாகவே வைத்தியம் உண்டாக்கப்பட்டது.

வைத்தியர் சுகம் உள்ளவர்கட்குச் சுகத்தைக் காப்பாற்றும் முறைகளைக் கூடியளவு அடிக்கடி பத்திரிகை வாயிலாகவும், வேறுமனேக வழிவகைகளாலும், அறிவிப்பது அவசியம். சுகம் உள்ளவர்களைச் சுகநிலையிற் சீவிக்கத் தூண்டிக்கொண்டு வருவது சுகம் அற்றவர்களைக் குணமாக்குவதிலும் எளிதாகும்.

சுகம் அற்றவர்களுக்குச் சுகத்தைப்பற்றி விளங்கப்படுத்துவது மிகவும் முக்கியமான காரியம். நோயாளி சுகத்தை அறிந்தபின், சுகமாகச் சீவிப்பது எளிதாயிருக்கும்.

சுகத்தை இழந்தவர்கள் சுகமடைய திரும்ப அடைய வேண்டுமாகில் வைத்தியம் செய்விக்க வேண்டும். வைத்தியன் தக்க பண்டிதனுகில், தன்னறிவினாலும், சிரேஷ்டமான ஔஷதங்களினாலும், நோயாளிகளுக்குச் சுகம் கொடுக்கக்கூடும்.

சுகமில்லாதவர்கள் பணமில்லாதவர்களாயின் பரோபகார வைத்தியரைச் தேடவேண்டும். தற்போதும் முற்காலம்போல், அநேக ஆயுர்வேத வைத்தியர்கள் இலவசமாய் வைத்தியமும் பொருளுபகாரமும் அளித்து வருகிறார்கள்.

நம் நாட்டிலுள்ள பரோபகாரச் செல்வர்கள தங்கள் மனதிற்குகந்த வைத்தியசாலைகளுக்கும், வைத்தியர்களுக்கும், தங்களாலியன்ற அளவு உபகாரம் செய்வது மிகவும் உத்தமம். இது ஓர் புது வழக்கல்ல. ஏனெனில் வைத்தியத்தைத் தாபிப்பது ஊரிலுள்ள செல்வர்களின் கடனே. அவ்வண்ணமே வைத்தியர்கள் வறியவர்கட்கு மருந்து கொடுப்பது மாத்திரமல்ல, நியாயப் பிரமாணப்படி பொருளுதவி செய்வதும் தகுதியாகும். நாம் அறியக்கூடியதாய்த் தர்ம சிந்தையுள்ள கனவான்கள் விடுவளவுகளையும், இலவசமாகமக்களின் நன்மையைக் கருதியே வைத்தியர்கட்குக் கொடுத்திருக்கிறார்கள்.

சரீரசுகமே சகல காரியங்கட்கும், ஆதிமூலமாயிருக்கின்றது. ஒருவன் மற்றொருவனுக்கு நல்லவனாய் இருக்க வேண்டுமாகின் சுகமுள்ளவனாய் இருக்கவேண்டும். வேதியராய் இருக்க வேண்டுமாகில் சரீரசுகமுடையவராய் இருக்க வேண்டும். தலைவர்களாயிருக்க வேண்டுமாயினும் இதுவே அவசியம் வேண்டும்.

நாம் வாரந்தோறும் பத்திரமூலமாய் சில விஷயங்களைப் பிரசுரம் பண்ணுவதற்கு ஆயத்தப்படுத்தியிருக்கிறோம். அவ்வண்ணமே எம் சகோதர வைத்தியர்களும் தாங்களறிந்த உண்மைகளை வெளிப்படுத்துவது தமிழ் அன்னையையே வளர்ப்பதாகும்.

(தொடரும்)

# சைவர்முன் நிற்கும் பணி

( 2-ம் பக்கத் தொடர் )

நாடுகளிலிருந்து தற்காலம் பணம் வருவதில்லை. இக்காட்டிலிருந்தே பலவித முறைகளிலும் பணங்களைச் சேர்த்துச் சிக்கனமாக வேலைசெய்து வருகிறார்கள். அதனால்தான் அவர்களுக்குக் காரியம் சித்தியாகின்றது. நாமும் ஏன் அவ்வித முறைகளைப் பின்பற்றக்கூடாது? நமது நாட்டில் செல்வர்கள், பணம்படைத்த மடாலயங்கள், விரயம் செய்யும் கோயிற் சங்கங்கள் அளவுகடந்து கிடக்கின்றன. இவைகள் மூலமாகப் பெருத்த காரியங்களைக் கைக்கொண்டு வெற்றியடையலாம். துரைத்தனத்தார் ஆண்டுதோறும் பெருத்த தொகைகளைக் கல்விக்குச் செலவழிக்கின்றனர். சைவர்களும் முயன்றால் பெரும் தொகைகளை உதவியாகப் பெறலாம்.

இனித் துரைத்தனத்தார் செலவிடும் தொகைகளைக் குறிப்போம்.

| | | |
|---|---|---|
| சர்வகலாசாலை | ரூ | 43,70,205 |
| கடுத்தரப்பாடசாலை | ,, | 1 04,99 905 |
| ஆரம்ப பாடசாலை | ,, | 2.35 24 085 |
| போதனுமுறைப் பாடசாலை | ,, | 18 40.104 |
| இதர பாடசாலைகள் | ,, | 35 33.691 |
| மொத்தம் எல்லாவகைகளுக் | | 5,40,94,044 |

| | | |
|---|---|---|
| கல்விச் சங்கம்மூலம் கொடுத்த தொகை | ரூ | 54,54 584 |

பிள்ளைகளுக்கு உதவி:—

| | | |
|---|---|---|
| கடுத்தர பாடசாலை | ரூ. | 1,90,584 |
| ஆரம்பபாடசாலை | ரூ. | 32,784 |

மேலே சொன்ன கணக்கின்படி ஆரம்பக் கல்விப் பாடசாலைகளுக்காக ஜில்லாக் கல்விச்சங்கங்கள்மூலமாகத் துரைத்தனத்தார் ரூபா 54,54,584 செலவிடுகிறார். இத்தொகையில் பெரும்பான்மையான பாகம் கிறிஸ்தவ பாடசாலைகளுக்குச் செல்கின்றது. அவர்களுடைய புத்தி கூர்மையைப் பின்பற்றிச் சைவசமயிகள் ஏன் அநேக பாடசாலைகளை வைத்துப் பெருந் தொகையைப் பெறக்கூடாது? முயற்சி செய்தால் அதன் பலன் தானே கிடைக்கும்.

சைவ சமயத்தோடு சேர்ந்து வருவது தமிழ் மொழியாகும். தமிழ் மொழியின் முன்னேற்றத்தை நோக்கமாகக் கொண்ட பல சங்கங்கள் நமது நாட்டில் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் இவைகள் செய்யும் காரியம் மிகச் சிறியது. சில ஆண்டுகளுக்கு முன் சென்னைப் பல்கலைக் கழகத்தார் கீழ்நாட்டு மொழிகளுக்காகத் தனிப்பட்டங்கள் ஏற்படுத்தினார்கள். அதற்காகத் தனிக்கலாசாலைகளும் ஏற்படுத்துவதற்கு இடம் கொடுத்தார்கள். இம்முறைகளுக்குத் துரைத்தன உதவியும் உண்டு. மொழி முன்னேற்றத்திற்கு அனுகூலமான இவ்விதிகளைக் கையாண்டு பயன் பெற்றவர்கள் யார் என்று அடியிற் காட்டிய புள்ளிகள் விவரிக்கும்.

| | | சாலைகள் | மாணுக்கர்கள். | |
|---|---|---|---|---|
| சமஸ்கிருதம்:- | உயர்வு:—ஆண் | 37 | 2402 | அங்கிகா |
| | பெண் | 3 | 297 | ரம் பெற் |
| ,, | ஆரம்பம்:—ஆண் | 63 | 2256 | றவை |
| | பெண் | 5 | 230 | கள் |
| | | 108 | 5185 | |
| சமஸ்கிருதம்:— | உயர்வு:—ஆண் | 99 | 1177 | அங்கிகாரம் |
| ,, | ஆரம்பம்:—பெண் | 2 | 31 | பெருதவைகள் |
| | | 101 | 1208 | |
| அரபி,பாரசீகம்:-உயர்வு | ஆண் | 215 | 7252 | ஷை |
| குரான்பாடசாலை:- | ஆண் | 305 | 13110 | |
| | | 520 | 20362 | |

மேலே கூறியபடி வடமொழியும் அரபி மொழியும் பயன் பெற்றன வேயன்றித் தமிழ்மொழி ஒரு பயனும் பெறவில்லை. வடமொழி, அரபி முதலிய மொழிப் பாடசாலைகளைப் பரிசோதிக்க அதிகாரிகளும் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்களுக்குத் துரைத்தனச் சம்பளமும் உண்டு. தமிழ் மொழிக்கு ஏதேனும் உண்டா? அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஏற்பட்டிருக்கும் தமிழ்மொழி ஆதரவும், திருவையாற்று வடமொழிக் கலாசாலையில் தமிழுக்குக் கொடுத்திருக்கும் ஒரு சிறு ஆதரவும் தவிர வேறு தமிழ்மொழிக்குக் கலாசாலை தனியாக எங்கேயாவது உண்டா? மேடைகளில் வெறுங் கூச்சலிடும் நமது பெரியார்களின் காரியத்திறம் எங்கே?

தனித் தனிச் சமயக் கலாசாலைகளைப் பற்றி ஒரு வார்த்தை கூறுவோம். நமது தென்னாட்டில் 305 குரான் பாடசாலைகளும் அவைகளில் 13110 பிள்ளைகளும் வாசிக்கிறார்கள். சைவத்திற்குத் தனிப்பாடசாலைகள் உண்டா? சிதம்பரம், வேதாரண்யம், கோவை முதலிய சில இடங்களில் மாத்திரம் தேவார பாடசாலைகள் உண்டு. தேவகோட்டை முதலிய இடங்களிலிருந்த சிவாகமச் சாலைகளும் சித்தாந்தச்சாலைகளும் மறைய ஆரம்பிக்கின்றன. இவைகளின் கணக்கையும் ஒருதரம் விரல் விட்டால் எண்ணிவிடலாம். துரைத்தனத்தார் அறிக்கைகளிலும் இவைகளைப் பற்றிக் கூறும் பாக்கியம் இவைகளுக்கில்லை. ஆகவே இவைகளின் நிலைமை எவ்விதத் தாழ்மையில் இருக்கிறது பாருங்கள்!

இவ்வெண்ணிக்கைகளெல்லாம் பிறமதங்களைக் குறைகூறுவதற்காகச் சொன்னவைகளல்ல. அவைகளின் மேன்மையான செயல்களையும் உயர்ந்த கொள்கைகளையும் எடுத்துக்காட்டி, நம் சைவர்களும் அவைகளை ஏன் பின்பற்றக்கூடாது என்று வலியுறுத்தும் பொருட்டே சொல்லப்பட்டன. நாம சைவர் என்று பெருமையுடன் பேசித் தன்னலத்திலேயே இருந்து கெடாமல், மன்னுயிர் எல்லாம் தன்னுயிர்போல எண்ணி, அன்னுருக்கெல்லாம் சைவ உயர்வை ஊட்டுவதே சிறந்த பணியாகக் கொள்ள வேண்டும். அப்பணிக்கு முன்காட்டிய முறைகளே தகுந்த முறைகளாகும். இவைகளே சைவர் முன் நிற்கும் பணிகள். —சித்தாந்தம்.

## காளிதாஸ கவியைப் பற்றிய கதை

(1-ம் பக்கத் தொடர்ச்சி.)

புராதன ராஜ்ஜியமான மாகரத்தின் தலைநகராகிய மாத்தறையில் நீல லலகங்கையின் கரையில் கவியரசனின் உடல் தகனம் செய்யப்பட்டது. அவனுடைய உடல் வெந்து கொண்டிருக்கையில் அவனுடைய நண்பனுன அரசன் குமாரதாஸனை பிரிவாற்றுமையால் அதனிற் குதித்துவிட்டதாகவும் அரசனுடைய ஐந்து பட்ட மனைவிகளும் அரசனைப் பின்பற்றித் தீயிற் குதித்துவிட்டதாகவும் தெரிகிறது.

இந்த எழுபேர்களுக்கும் ஏழு சமாதிகள் கட்டப்பட்டு நதனமீது வெள்ளரசுக் கன்றுகள் வைத்துப் பயிர் செய்யப்பட்டன. இந்த இடம் வெகுகாலம் வரையில் ஓர் யாத்திரை ஸ்தலம்போலவிளங்கியது. இந்தியாவிலிருந்தும் பலர் வந்து கவியின் சமாதியைக் கண்டுபோவதுண்டு.

கி. பி. 1783ல் ஒரு டச்சுக்காரர் இந்தச்சமாதிகளை இடித்து வேறு உபயோகத்திற்கு எடுத்துக்கொண்டதாகவும் வெள்ளரசை வெட்டி வீழ்த்திவிட்டதாகவும் கூறப்படுகிறது

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பலவியாதிகளைக்குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். இதை சான்விளம்பரத்தில்உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனுலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதாறு,சாலாமுஸ்லி,சப்பேமுச்லிவி பிஸ்தாஸ், சாரப்பருப்பு, பாதம் பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளி விதை, காகப்பூ, வங்கபஸ்பம், அரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அபகாந்தசெந்தூரம், சாம்பிராணிபதங்கம் இன்னும், அநேகபுஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது

இதனுல் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை,பித்தபாண்டு. பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயுஇன்னும் அநேக கடுமையான வியாதிகள்தீருப் ஸ்திரீகள் இந்தலேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் சூதக வாய்வு, பிரசவஅறையில் உண்டாகும் நோய்கள்தீர்ந்துதேகபுஷ்டியும்பலமும் பெறுவார்கள். பால்விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரை ரூத்தலுக்கு ரூபா பத்து. கால் ரூத்தலுக்கு ரூபா டு. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர்பினுக்கு முதலிய தொடுவாயிராச்சியப் பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததனுல் முன் மனிஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
வெருகன் ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு

Y46 1-1-36 to 31-12-36) லோன்.

## விளம்பர விகிதம்.

வியாபாரத்தை விருத்தி செய்யவேண்டில் இந்துசாதனப் பிரசுரங்களில் விளம்பரஞ் செய்க.

| | | | |
|---|---|---|---|
| 1 | பந்தி (கலம்) | ரூபா | 10-00 |
| ½ | ,, ,, | ,, | 5-50 |
| ¼ | ,, ,, | ,, | 4-00 |
| 1 | அங்குலம் | ,, | 1-00 |

அடுத்த பிரசுரங்களிற் பாதி விகிதம்.

காலம் நீடித்த விளம்பரங்கள் விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்துமூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

மானேஜர்
சைவப்பிரகாசயந்திரசாலை'

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893 ம் ஆண்டின் 8 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவு பிடிக்கும் பறங்கித்தெரு சி. வீ. & சன்ஸ் கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12 ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:—

கஉ. திகதி ரூ. பெயர் ஊர். அடைவுவிபரம்

1933 ஞு கார்த்திகை மீ

A 70 21 10 காசலிங்கம் சின்னத்துரை மண்டைதீவு பொன்மோதிரம் 1

1934 ம் ஞு தை மீ

172 8 7 மு. யூசுப்பு சோனகதெரு பொன் புரூச் 1

சித்திரை மீ

359 6 60 சவிரிமுத்து கைபெண் இராசம்மா பறங்கித்தெரு பொன் மோதிரம் 3 ஷை கல் காதோலைசோடி 1

ஐப்பசி மீ

690 14 18 சாள்ஸ் விசைலன்ஸ் 2 ம் குறுக்குத்தெரு பொன் குரூசு 1 மேற்படி மோதிரம் 1

மார்கழி மீ

804 12 8 சூசைப்பிள்ளை மனுவேல்பிள்ளை பாங்சோல்றோட் பொன் மோதிரம் 3

810 12 55 அருளம்பலம் விஸ்வநாதர் புத்தூர் பொன் செடிவைத்த பவுண் 1 ஷை கவுத்தோர் 1 ஷை மோதிரம் 1

835 23 8 அந்தோனிப்பிள்ளை பொன்னையா சுண்டிக்குளி மோதிரம் 1

1935 ஞு தை மீ

863 5 12 அந்தோனிபெண் சூசானம் கரையூர் பீச்றோட் பொன் கல் காதோலை சோடி 1

889 16 45 கார்த்திகேசு சின்னத்தம்பி சிறும்பியடி வண்ணிழக்கு பொன் அச்சுக்காப்பு சோடி 1

8⁰8 21 50 நாகமுத்து செல்லையா வெள்ளாசுதெரு மேற்கு பொன் பட்டணக்காப்பு சோடி 1

மாசி மீ

933 5 7 சூசை நீகிலாஸ் கரையூர் பொன் பதக்கம் 1

949 11 30 மாப்பாணபிள்ளை மயில்வாகனம் புத்தூர் பொன் சங்கிலி 1 S பழுது

பங்குனி மீ

1013 11 18 கதிரன் வல்லி அச்சுவேலி பொன் கவுத்தோர் 1

1028 16 7 சிற்றம்பலம் வயித்திலிங்கம் சிறும்பியடி பொன் மோதிரம்1

1051 25 180 முத்தையா தாமோதரம்பிள்ளை பீச்றோட் பொன் சங்கிலி பூ உள்பட 1 ஷை செடி வைத்த டலர் 1 ஷை குண்டு கொளுக்கி சோடி 1 ஷை கட்டை 1 ஷை இதயம் 1 ஷை கட்டை வைத்த பதக்கம் 1 ஷை டிம்பி 1 ஷை சிவப்புக் கல் 1

1065 27 224 சிற்றம்பலம் வயித்திலிங்கம் சிறும்பியடிபொன் மு. கொடி 1 அரைப்பவுண் 2 உள்பட

சித்திரை மீ

1067 1 6 அருளம்பலம் விஸ்வநாதர் புத்தூர் பொன் மோதிரம் 1

1094 8 7 Do Do பொன் அட்சரக்கூடு 1

1144 20 20 சந்தியோ தேவசகாயம் பாசையூர் பொன்கைச்சங்கிலி 1

வைகாசி மீ

1201 13 12 விஞசித்தம்பி இராசரத்தினம் சுண்டிக்குளி பொன் பென்டன் 1

1218 22 15 தா. நவரத்தினராசா பீச்றோட் பொன் கவுத்தோர் 1

1225 24 50 முத்தையா தாமோதரம்பிள்ளை பீச்றோட் பொன் காற்பது பவளமடங்கிய மாலை 1

1238 31 5 அந்தோனி சூசானுள் கரையூர் பெடன் பொத்தான் 1 ஷை குச்சு சோடி 2

ஆனி மீ

1260 7 60 அந்தோனி யோசேப்பு கரையூர் பொன் பூரானட்டியல் 1

1264 8 15 இராயப்பு ஆனுசிப்பிள்ளை மாரியங்கூடல் பொன் தாலிக்குடம் 1

1290 18 10 வேதவனம் செல்லத்துரை வட்டுக்கோட்டை பொன் காதோலை சோடி 1

1297 19 350 கவுரியேல் அந்தோனிப்பிள்ளை பாசையூர் பொன் தாலிக்கொடி 1 செற்றுடன்

1310 22 5 ஞா. பி. கனியஸ் ஆஸ்பத்திரிறோட் பொன் மோதிரம் 1

1337 28 15 அந்தோனி அகஸ்தீன் சுண்ணுகம் பொன் கல் கடுக்கன் சோடி 1

விற்பனவு: தாது வருஷம் ஆவணி மீ 26 க் திகதிக்குச்சரியான (10 9.36) வியாழக்கிழமை காலை 10 மணி தொடக்கம் எடுபட்டகைக பிறகேலாக மிகுதி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

S. பெரியதம்பி, வெந்தீஸ் மேஸ்தர்.

Mis 122 24 & 27-8-36

## பவுண்மார்க் ஓடுகள்!
## றங்கூன் தேக்கமரங்கள்

### பவுண்மார்க் ஓடுகளை நீங்கள் வாங்குதற்கான ஐந்து நியாயங்கள்:-

1. பவுண்மார்க் ஓடுகள் உத்தமமான செந்நிறம் பொருந்தியவை
2. பவுண்மார்க் ஓடுகள் தற்காலத்துக்கேற்ற நல்ல கொழுக்கி முறையைக் கைக்கொண்டிருக்கின்றன.
3 பவுண்மார்க் ஓடுகள் திருத்த முறையைக்கைக்கொண்டதனுல் அதிக நெருக்கமாக அடுக்கப்படக்கூடியவை.
4. பவுண்மார்க் ஓடுகள் மற்றைய ஓடுகளிலும்பார்க்கக் கூடிய இடத்தை நிரப்பக்கூடியவை
5. பவுண்மார்க் ஓடுகளில் தூசிபிடிக்கவும்மாட்டாது; தண்ணீர் பொசியவும் மாட்டாது.

அதின் விசேஷமே ஒலிக்கிறது.

உங்கள் வீடுகளைப் பவுண்மார்க் ஓடுகளைக்கொண்டு வேயும்போது நீங்கள் செலவிடும் ஒவ்வொரு ரூபாவும் மேலதிகமான இடத்தை நிரப்புகிறதென்பதை மறவாதீர்கள்.

தேக்க மரங்கள்.

றங்கூன் திறமான தேக்கமரங்கள் பல இனிசுகளிலும் இப்போது தான் கிடைக்கப்பெற்றிருக்கிறோம்.

S. வீரகத்திப்பிள்ளை & சன்ஸ்
தேக்கமர, ஓட்டு வியாபாரிகள்
தெலிபோன் நே. 93. யாழ்ப்பாணம்.
(Y 109. 11-8-36 to 11-8-37) வி.

# Nethrananda Thailaya

**Ceylon's Premier Curative Medicine Oil.**

## நேத்திரானந்த தைலம்.

**இலங்கையில் மிகவும் சித்திபெற்ற மருந்து எண்ணெய்களில் இதுவேமுதல்தரம்.**

6 அவுன்ஸ் போத்தல் விலை ரூபா 2-50.
தபாற்கூலி 45 சதம்.



இது சிரசில் உண்டாகும் மண்டையிடியை ஐந்து நிமிஷத்திற்குள் நீக்குவதோடு கண்ணில் உண்டாகும் சகல எரிச்சல், மங்கலான பார்வை, நீர்வடிதல், சதைபடர்வு, என்னும் சகல கண்வியாதிகளையும், தலைமயிர் உதிர்தல், தலை மொட்டை, தலை நரை, பீனிசம் என்பவைகளையும் போக்கி தலைமயிரை நீளமாய் வளரச்செய்து பளபளப்பையும் கொடுக்கிறது. இதை உபயோகித்தால் கண்ணாடி போடத் தேவையில்லை. சிறியோரும் பெரியோரும் வயது வித்தியாசமின்றி உபயோகித்து வேண்டிய வேண்டிய சுகம் பெறக்கூடும்.

இலங்கையிலுள்ள கனவான்களாகியபெரிய உத்தியோகஸ்தர்களும், வியாபாரிகளும், சீமான் செட்டிகளுமான யாவரும் அச்சமின்றி உபயோகித்து இதன் அரிய குணத்தைக் கண்டிருக்கிறார்கள், வெளிவந்திருக்கும் ஏனைய போலித்தைலங்களைப்போல் இதை நினையாமல் உடனே வாங்கி உபயோகியுங்கள்.

மனிதர் முக்கியமாகத் தெரிந்துகொள்வதும், மாதர் அதிகமாக விரும்புவதும் 35 வருஷங்களாக யாவராலும் அதிகமாகப் புகழப்படுவதும்

### இந்த நேத்திரானந்த தைலமே.

இந்தச் சிறந்த எண்ணெய்க்கு நீண்ட பெயர் உண்டு என்று வார்த்தைரிகிற ஒவ்வொரு சிறபிள்ளைக்கும் தெரியும். சிரசில் ஏற்படுவதான தலை மயக்கம், கண் எரிவு, தலைவலி, இள நரை, தலைவழுக்கை, தலைமயிர் உதிர்தல் முதலிய எந்த வியாதிக்கும் இது ஏற்ற நிவாரணி என்று பலரும் அறிந்து உத்தரவாதம் செய்யப்பட்டது. நேத்திரானந்த தைலத்தினுல் யாவும் சுகமாக்கப்படுகிறது. இது தற்காலத்தில் செய்யப்படும் போலித் தைலத்தைப் போலல்ல இலங்கையிலும் பிறதேசங்களிலும் நன்கு பரீட்சிக்கப்பட்டுள்ளது.

தலைமை ஸ்தாபனம்:—
வைத்தியசேகர முதலியார்,
டப்ளியு. டானியல் பெர்னண்டோ,
ஸ்ரீவேத வளவும், பாணதுறை.

கிளை ஸ்தானம்:—
பௌத்தமந்திர வைத்தியசாலை.
நோரிஸ்ரோட், கொழும்பு—இலங்கை
காவில் ஹோட்டல், கண்டி.

தந்தி விலாசம்:—வேத முதலியார் பாணதுறை.

(H 332. 20-3-36 to 19-9-36)



# இலங்கையில் நெய்யப்பெறும் சீலைகளையே வாங்குங்கள்!

**நமது நாட்டுக் கைத்தொழிலை ஆதரியுங்கள் !!**

## வேட்டிகளும் சால்வைகளும்

### நூலிற் சலவை செய்யப்பெற்ற வேட்டிகள்

பட்டுப்பூப் போட்டதும், பச்சை, சிவப்பு, ஹெலிக்கோ ஆதியாம் நிறங்களிற் கரைவேலை யுடையதும் ஆகும்.

50,, × 4யார் தனித்தனி ரூ1-50
45,, × 3½ ,, ,, ,, 1-40
50,, × 4 ,, ,, ,, 1-45

மேற்படி வேட்டிகளுக்குப் பொருத்தமான சால்வைகள்

36,, × 2½யார் தனித்தனி 80
38,, × 2½ ,, ,, ,, 75
40,, × 2½ ,, ,, ,, 80

மெல்லிய பூக்கரையுள்ளவை
50,, × 4யார் தனித்தனி ரூ1-55
அவற்றிற்கேற்ற சால்வைகள்
35,, × 2½யார் தனித்தனிசதம்80

### பார்மாஸ் வேட்டிகள்

தூய வெள்ளை நிறம்
50,, × 4யார்தனித்தனி ரூ 1.50
அவற்றிற்கேற்ற சால்வைகள்
35,, × 2½யார் சதம் 75.

### நூலிற் சலவைசெய்யப்பெற்ற வேட்டிகள்

பூக்கரைகளை யுடையனவை
47 ,, × 4 யார் தனித்தனி ரூ 1-50
வரிபோன்ற கரையை உடையவை
52 ,, × 4 யார் தனித்தனி ரூ 1 45
அழகான ஒற்றைவரிக் கரைகளை யுடையவை
48 ,, × 4 யார் தனித்தனி ரூ 1-25
மெல்லிய வரிக் கரையை யுடையவை
46 ,, × 4 யார் தனித்தனி ரூ 1-20
48 ,, × 3½யார் தனித்தனி ரூ 1-15
அவற்றிற்குத் தகுந்த சால்வைகள்
40 ,, × 2½ யார் தனித்தனி ச 75
38 ,, × 2½ யார் தனித்தனி ச 65

### கிரே வேட்டிகள்

அழகான கரைகளையுடையவை
44 ,, × 4யார் தனித்தனி ரூ 1-25
44 ,, × 4யார் தனித்தனி ரூ 1-30
அவற்றிற்கேற்ற சால்வைகள்
38 ,, × 2½ யார் தனித்தனி ச 75

### நூலிற் சலவை செய்த வேட்டிகள்

பச்சை, சிவப்பு, ஹெலிக்கோ நிறங்களிற் பட்டுப்பூக் கரைகளை யுடையவை
48 ,, × 4 யார் தனித்தனி ரூ 1-50
52 ,, × 3½யார் தனித்தனி ரூ 1-50

கனவான்களே!
நீங்கள் எவ்வளவு தேடினும் எங்கள் ட்ரில் துணிகளைப்போலச்சிறந்த துணிகளைப் பெற முடியாது. நாமித் சலவைசெய்யப்பெற்ற எமது ட்ரில்ஸ் நல்ல பாவிப்புக்கு ஏற்றபிடிக்கக்கூடியவை.
28 ,, அகலம் சுப்பர் பிலீச் ட்ரில் யார் ஒன்றுக்கு 45 சதம்
28 ,, அகலம் பிலீச் பண்ணுத ட்ரில் யார் ஒன்றுக்கு 35 சதம்

### லங்கா லாங்குளோத்ஸ் இப்போது இல்லை

இப்போது சகல பாவிப்புக்கும் சகலருக்கும் தகுந்த ஒரு புதிய லாங்குளோத்ஸ் எம்மிடம் இருக்கின்றன.

### பப்புலர் லாங்குளோத்ஸ்

30 ,, அகலம் யார் ஒன்றுக்கு சதம் 20 அல்லது 20 யார் கொண்ட ஒரு தண்டிக்கு ரூபா 3-40

### ஸ்டாண்டர்ட்லாங்குளோத்ஸ்

பொதுப்பாவிப்புக்குரிய மிகச் சிறந்த லாங்குளோத்ஸ்
32 ,, அகலம் யார் ஒன்றுக்கு சதம் 23 அல்லது 20யார் உள்ள தண்டிக்கு ரூ 4.
42 ,, அகலம் யார் ஒன்றுக்கு 32 சதம் அல்லது 20 யார் கொண்ட ஒரு தண்டிக்கு ரூபா 5 35

### லங்கா லாங்குளோத்ஸ்

பெண்களுக்கும் சிறபிள்ளைகளுக்கும் உள் உடையாகப் பாவிக்கக்கூடிய மேன்மையான மிக நெருக்கமாக செய்யப்பெற்ற நினுசுகள்
42 அகலம் யார் ஒன்றுக்குச் சதம் 35
20 யாருள்ள ஒரு தண்டிக்கு ரூபா 6-50

### சுப்பர் பைன் லாங்குளோத்ஸ்

கிட்டிப்பாவிப்புக்கு மிகச் சிறந்தவை
42 ,, அகலம் யார் ஒன்றுக்கு 45 சதம் அல்லது 20 யார் கொண்ட ஒரு தண்டிக்கு ரூபா 8-50

### சுப்பர் லாங் குலோத்ஸ்

தலைட்டைக்கு மிகச் சிறந்த சீலை வேண்டும் போது இது வாங்கத்தக்கது.
42 ,, அகலம் யார் ஒன்றுக்கு 55சதம் அல்லது 20யார்கொண்ட ஒரு தண்டிக்கு ரூ9-75

### வெள்ளை மல்

54 ,, அகலம் யார் ஒன்றுக்கு சதம் 45 அல்லது20யார் கொண்ட ஒருதண்டிக்குரூ 7
49 ,, அகலம் யார் ஒன்றுக்கு சதம் 30 அல்லது 20யார்கொண்ட ஒருதண்டிக்குரூ5,

சில்லறை வியாபாரக்கடை,
133 மெயின்ஸ்ட்ரீட், புறக்கோட்டை, கொழும்பு, பெரியகடை, யாழ்ப்பாணம்.

தி சிலோன் ஸ்பின்னிங் அன் வீவிங் கம்பெனி லிமிட்டெட்டின்
முதலாவது மோட்கேஜ டிபெஞ்சர்கள் வைத்திருப்போருக்கு டிரஸ்டிகள்

(Mis 104 10 8-36 to 28-9 36) (வி)



# ஆரோக்கிய லேகியம்

சிறந்த மலசுத்தி ஔஷதம்

மலபந்தமே உங்களின் ஆரோக்கியத்துக்கு இடையூறாகும். ஆரோக்கிய லேகியம் சாப்பிடுவதால் தினசரி கிரமமாய் மலம்கழியும்; சோம்பல் நீங்கும்; தினசரி அலுவல்களுக்கு உற்சாகம் உண்டாகும்.

இன்னும் சித்திரை சுலிதம், நீருடன் ஸ்கலிதமாதல், உடம்பு இளைத்து வருதல், கை கால்சதி, குடைச்சல், நீக்கும். பத்தியமில்லை.

20 ரூபா எடை டின் விலை ரூ. 2-00 தபால்செலவு சதம் 75

## நீரழிவுக்கு.

அப்ரேக் செந்தூரம் கைகண்ட மருந்து.

பரீக்ஷை:—ஒரு மண் கலசத்தில் ஊசி அளவுழும்படியான சிறிய துவாரங்கள் போட்டு அதில் ஜலம் விட்டு ஒழுகும்போது நமது அப்ரேக் செந்தூரம் ஒரு ஸிட்டி எடுத்துப் போட்டால் ஒழுகும் ஜலம் உடனே அடைபட்டுவிடும். அதேபோல் நீரழிவில் அளவுமீறி ஓடிய நீரைக் குறைத்து நீரில் சர்க்கரை இருப்பது, தாகம் வரட்சி இவைகளைக் குணமாக்கும்.

20 நாள் மருந்து விலை ரூபா 12.50 சதம்.
ஸ்பெஷல் அனுபானம் சதாவாரி லேகியம் ரூபா 4-50.

## தங்கபஸ்பம்.

தாதுபுஷ்டிக்கு ஓர் வரப்பிரசாதம்.

மெலிந்த தேகத்தைப் போஷித்து சரீரத்தில் புதியரத்தத்தை ஊறச்செய்து அளவற்ற பலம், ஆண்மை வீரிய விர்த்தி உண்டாக்கும். பத்தியமில்லை. (விபரமான கேட்லாக் இரும்.)

30 வேளை தங்கபஸ்பம் ரூபா 10. அனுபானம் லேகியம் ரூபா 2-50.
வெளிநாட்டு நண்பர்கள் ஆர்டருடன் முன்பணமனுப்ப வேண்டும்.

தண்டபாணி வைத்தியசாலை, பழனி.

Q 19. 27-4 to 26 10-36 வி (Palni S. I.)



# கண்ணோ பிரதானம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வடகிழக்கில் பிறவுண்ரோட் (கரியன் குன்று) ரத்தினவாசத்தில் அமைக்கப்பெற்ற அமிர்தானந்த வைத்தியசாலையில் இப்பொழுது நேத்திரத்திற்குரிய சிகிச்சைக்கு வேண்டப்படும் ஔஷதங்கள் கருவிகளும் சேர்க்கப்பட்டிருத்தலால் வேண்டியவர்கள் காலை 7 மணி முதல் 10 மணிவரை வசதியாக ஆலோசனை செய்து சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம் மற்றைய நோய்களுக்கு வேண்டிய சிகிச்சை முன்போல் நடைபெறும்.

வைத்தியசாலை சொந்தக்காரர்
ச. இராமலிங்கம் வைத்தியர்

Address:—
Manager
Amirdananda Vaidyasalai
"Ratna Vasa" Brown Road
Vannarponnai
Jaffna (Ceylon)

Y. 27-5-36 to 30-4-37. (வி)



# திருநெல்வேலி ஒற்றுமை நிதி,

( வரையுளது )

**அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா 500,000.**

ஒன்று 25சதமாக 80 மாதங்கள் செலுத்திரூபா 5ம்ஆதாயமும்பெறலாம்

தனிகத்தொழிலும் உணவுப்பொருள் வியாபாரமும் திருநெல்வேலியில் இலாபகரமாய் நடக்கின்றன

வேண்டிய இடங்களில் கிளை ஸ்தாபனங்கள் திறக்கப்பெறும். தேசிய கருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெற முடியும். ஆதலால், முதலை வளர்த்து வேலை பணித்து, கைத்தொழிலை உயிர்ப்பிக்கும் நோக்கங்கொண்ட இந்நிதியை ஆதரியுங்கள்!

இலகுவான முறையில் இறுக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம். உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும் நிபந்தமாயும், சம் பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும் பணம் ஏற்றுக்கொள்ளோம்

பங்குகளுக்கு முந்துங்கள்!!

கைராட்டினத்தில் நூற்ற நூலும், கைத்தொழில் பொருளும் சந்தாவுக்கு ஏற்றுக்கொள்ளுவோம்.

வ. சோமசுந்தரம்,
காரியாதிகாரி.

(Y. 189. 1-11-35 to 31-10 36.) வி.



தலைவலியுற்றபோது

# லிட்டில்ஸ் ஒரியண்டல்பாம்

## தைலத்தை

நெற்றியிலும் கன்னத்திலும் தேயுங்கள்
தலைவலி யுடனே மாறிவிடும்
அதுவுமன்றி இது இந்தியாவில்
இந் யர்களாலேயே செய்யப்படுவது
இத்தைலமே எல்லாவற்றிலும் சிறந்தது

44. 1-1-31-12-36)



## வியாபாரத்திற்கழகு

## விளம்பரஞ்

## செய்தல்

## அதற்குகந்தது

## இந்துசாதனமே.


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம்வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday, August 27th 1936.